Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 37 சோபகிருது வருடம், ஆடி மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை (11.08.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 23, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## கொரோனா தடுப்பூசி இன்மையால் வெளிநாடு செல்வோருக்கு சிக்கல்




நாட்டில் கொரோனா தடுப்பூசிகள் இருப்பில் இல்லாததால் வெளிநாடு செல்லும் எதிர்பார்ப்பிலுள்ளவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் தடுப்பூசி தொடர்பான பிரச்சினை தொடர்ந்து இருக்குமாக இருந்தால் இலங்கையில் மீண்டும் கொரோனா தொற்று நிலைமை பரவலடையலாம் எனவும் சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலைமை தொடர்பில் அரச அதிகாரிகள் அதிக கவனம் செலுத்தி, விரைவாக பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

02 பக்கம்




இலங்கைக்கான இந்தோனேஷியத் தூதரகத்தில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற 56ஆவது ''ஆசியான்'' தின கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இலங்கைக்கான இந்தோனேஷியத் தூதுவர் டீவி குஸ்டினா டோபிங், மலேசிய உயர்ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் எடம், தாய்லாந்துத் தூதுவர் போஜ் ஹர்ன்பொல், வியட்நாம் தூதுவர் ஹோ தி தன் ட்ரக், மியன்மார் தூதுவர் யூ ஹன் து ஆகியோர் காணப்படுகின்றனர்.

## விலைக் குறைப்புடன் எரிபொருள் விற்பனை

### சினோபெக் கோரிக்கை




இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலையை விட, ஒவ்வொரு வகையைச் சேர்ந்த ஒரு லீற்றர் எரிபொருளையும் 03 ரூபாவால் குறைத்து விற்பனை செய்ய 'சினோபெக்' நிறுவனம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

02 பக்கம்

## மலையக மக்கள் வேண்டுவது அனுதாபம் அல்ல, நியாயம்!

### சபையில் பிரேரணையை சமர்ப்பித்து மனோ உரை



எமது மக்கள் மத்தியில் நிலவும் நவீன அடிமைத்துவ நிலைமைக்கு இலங்கையை மாறி, மாறி ஆண்ட இனவாத அரசுகள், இந்திய அரசு, பிரித்தானிய அரசு ஆகியவை பொறுப்பேற்க வேண்டும்.

02 பக்கம்

## குறுகிய காலத்துக்குள் நிறைய செய்துள்ளோம்!

### திகாம்பரம் எம்.பி. சபையில் பெருமிதம்



எங்களுக்குக் கிடைத்த குறுகிய காலத்துக்குள் பல உரிமை சார்ந்த விடயங்களை செய்திருக்கின்றோம். நாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று பேசுகின்றவர்கள் நாங்கள் செய்தவற்றை பேசுவதாக இல்லை.

02 பக்கம்

# ரணிலின் தேவையற்ற தலையீடு: விளக்கம் கேட்க அழையுங்கள்!

### பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி நேற்று சபையில் ஆவேசம்



*நா. தினுஷா*

பாராளுமன்ற ஒழுங்குவிதிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையற்ற தலையீடுகளை செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி நேற்று(10) பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார்.

சபையில் ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய அவர் மேலும் கூறியதாவது,

இது என்னுடைய பிரச்சினை மாத்திரமல்ல. இது பாராளுமன்ற உறுப்பினர்களினதும் நாட்டு மக்களினதும் சிறப்புரிமைகள் மீறப்பட்டமை தொடர்பானது.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையானது ஜனாதிபதியினால் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரவேண்டிய தேவையுடைய ஆவணம் இல்லை. இருந்தபோதும் அதனை பாராளுமன்றத்துக்கு எடுத்துவந்து, பாராளுமன்றத்தில் அனுமதியைப் பெற்றுக்கொண்டதாக தெரிவித்து, அப்பாவி மக்கள் நீதிமன்றத்துக்கு செல்வதற்கு இருந்த வாய்ப்பையும் இல்லாமலாக்கிவிட்டார்.

அதன் பின்னர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவரை பாராளுமன்றத்தினூடாகவே நியமிக்கவேண்டும். ஆனால், அந்தக் குழுவின் தலைவரையும் ஜனாதிபதியே நியமித்தார். அவ்வாறிருக்கையில், நேற்று (நேற்று முன்தினம்) பாராளுமன்றத்தின் ஒழுங்குவிதிகளில் தலையிடுவதற்கு அச்சுறுத்தல் விடுத்தார்.

உயர்நீதிமன்ற நீதியரசர்களை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைத்தார். எனவே, பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறியமை தொடர்பில் ஜனாதிபதியை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைக்க வேண்டும் என்று யோசனை முன்வைக்கிறேன். தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் சிறப்புரிமைகளை ஜனாதிபதி மீறி வருகிறார் என்றார் சந்திம எம்.பி.

## கோட்டாவின் இறுதிப்பயண தகவல் வழங்கப்படாமல் இழுத்தடிப்பு

*றிப்தி அலி*

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு மாலைதீவுக்கு தப்பிச் செல்வதற்காக பயன்படுத்திய இலங்கை விமானப்படையின் விமானம் தொடர்பான தகவல்களை கோரியிருந்த நிலையில், அந்த தகவல்களை வழங்காமல் இலங்கை விமானப்படை தொடர்ச்சியாக இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

குறித்த தகவல்களை கடந்த ஜூலை 04ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேயவர்த்தன தலைமையிலான தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு கடந்த ஜூன் முதலாம் திகதி இலங்கை விமானப்படைக்கு உத்தரவிட்டிருந்தது.

ஆனால், தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உத்தரவை இலங்கை விமானப்படை அமுல்படுத்தாமல் தொடர்ச்சியாக இழுத்தடித்துக் கொண்டு வருகின்றது.

எனினும், தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவினால் தகவல் வழங்குவதற்காக இலங்கை விமானப் படைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதியிலிருந்து 35 நாட்கள் கழிந்துள்ள நிலையிலும் குறித்த தகவல்களை இலங்கை விமானப்படை வழங்கவில்லை.

02 பக்கம்

## 13 குறித்த ரணிலின் உரைக்கு உரிய நேரத்தில் பதிலளிப்பேன்

### அவசரப்படவில்லை என்கிறார் சம்பந்தன்



"அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வின் அவசியம் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரையை முழுமையாகக் கேட்டேன். ஆனால், அவரின் உரை தொடர்பில் அவசரப்பட்டு பதிலளிக்க விரும்பவில்லை.

02 பக்கம்

## அரசுக்கெதிராக அணிதிரள அரசியல் கட்சிகள் பேச்சு

### டலஸ் எம்.பி. தகவல்



அரசாங்கத்துக்கு எதிராக அணி திரளுவதற்கான பேச்சுவார்த்தையொன்றை பிரதான எதிர்க் கட்சிகள் முன்னெடுத்து வருகின்றன. சுதந்திர மக்கள் சபையின் தலைமையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும தெரிவித்தார்.

02 பக்கம்

## 'அரகலய' போராட்டம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை

### 60 சதவீதமானோர் கருத்து- ஆய்வில் வெளியான தகவல்

போராட்டக்காரர்கள் காலி முகத்திடலில் இருந்து வெளியேறி ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஆளுகை மற்றும் ஊழலை சரிசெய்வது அவசியம் என்று மக்கள் கூறுவதாக வெரிட்டே ரிசர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

'அரகலய' போராட்டம் மக்களின் விருப்பங்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்ற வழிவகுத்தது என்று...

02 பக்கம்

## உஷ்



முன்னாள் எம்.பி ஆஷு மாரசிங்க, சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்குச் சென்று நீண்ட நேரம் காத்திருந்தாராம்.

நீண்ட நேரமாகியும் அவர் அப்படி காத்திருக்க என்ன விடயம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் விசாரித்தபோது, சுகாதார அமைச்சர் கெஹேலியவை சந்திக்கச் சென்ற ஆஷு, விலாசம் குழம்பியதால் மஹிந்தவின் வீட்டில் காத்துநின்றமை தெரியவந்தது.

எப்படியோ பின்னர் அருகில் இருந்த கெஹேலியவின் வீட்டை நோக்கிச் சென்றாராம் ஆஷு..

## பொலிஸ் அதிகாரங்கள் குறித்து டிரானுடன் தமிழ் எம்.பிக்கள் பேச்சு



02 பக்கம்

## பறாளை முருகன் ஆலய வர்த்தமானி பரிசீலனைக்கு

### ரணில் உத்தரவாதம்





*பு.கஜிந்தன்*

சுழிபுரம், பறாளை முருகன் ஆலயத்தின் தல விருட்சமான அரச மரத்தின் ஆயுட்காலத்தை தீர்மானிக்க விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சி செய்து முறையற்ற விதமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



நல்ல நேரம், காலம் எல்லாம் பார்த்துத்தான் ரணிலுக்கு பதிலளிப்பாரோ சம்பந்தன் ஐயா?

## கொரோனா தடுப்பூசி

இதுதொடர்பில் நேற்று (10) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்போதுவரையில் கொவிட் - 19 தொற்றை கட்டுப்படுத்துவதற்கான எவ்வித தடுப்பூசியும் இருப்பில் இல்லை. குறிப்பாக, நாளாந்தம் வெளிநாடு செல்பவர்கள் நாளாந்தம் கொவிட் - 19 பரிசோதனைக்கான இலத்திரனியல் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக வருகைத் தருகிறார்கள்.

அவ்வாறு வருபவர்களில் இதுவரையில் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாமல் அநேகமானவர்கள் இருக்கிறார்கள். வயது எல்லையின் அடிப்படையில் இளைஞர்கள் அநேகமானவர்கள் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். இவர்களில் வெளிநாடுகளுக்கு செல்லும்போதும் பாரதுரமான நெருக்கடியை சந்தித்து வருகிறார்கள். குறிப்பாக மேற்கத்தேய நாடுகளில் கொவிட் - 19 இற்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட சான்றிதழை நிச்சயமாக பரிசோதனைக்கு உட்படுத்துவார்கள். கொவிட் - 19 தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாமல் அந்த நாட்டில் சேவையாற்றும்போதோ அல்லது அங்குள்ள செயற்பாடுகளில் ஈடுபடும்போதோ கடுமையான சிக்கல்களை சந்திக்க நேரிடும்.

இந்நிலையில், எமது நாட்டில் கொவிட் - 19 கட்டுப்பாட்டுக்காக வழங்கப்படும் சினோபாம், பைசர் அல்லது வேறு எந்த தடுப்பூசியும் இருப்பில் இல்லை. அதன்காரணமாக வெளிநாடு செல்லவுள்ளவர்கள் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறார்கள். இதுதொடர்பில் அரச அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அண்மைக்காலமாக தற்போது மேற்கத்தேய நாடுகளில் கொவிட் - 19 தொற்று நோய் பரவலடைந்து வருகிறது. அந்த நாடுகளிலிருந்து எமது நாட்டு பயணிகளும் வருகை தந்த வண்ணமே இருக்கிறார்கள்.

எனவே, இலங்கைக்குள் தடுப்பூசி போதியளவு இன்மை மற்றும் கொவிட் பரவல் தொடர்பில் கவனம் செலுத்தாமை போன்ற காரணங்களினால் இலங்கைக்குள்ளும் கொரோனா தொற்றும் மீண்டும் பரவலடையலாம். அதனால் நெருக்கடி நிலை ஏற்படலாம் என்றார்.

## அரசுக்கெதிராக...

இந்த பேச்சுவார்த்தையின் இரண்டாம் கட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் (10) சுதந்திரக் கட்சியுடன் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராகவும் ஜனநாயகம், பொருளாதாரம், சட்ட ஒழுங்கை நிலை நாட்டும் வகையிலேயே இந்த புதிய கூட்டணி அமையப் பெறுமென டலஸ் அலகப்பெரும எம்.பி. மேலும் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சுதந்திர மக்கள் சபை என்ற அடிப்படையில் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடல் நடத்த தீர்மானித்திருந்தோம். எதிர்க்கட்சிக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் அடக்குமுறை கொள்கைக்கு எதிராக எதிர்க்கட்சி ஒன்றுபட வேண்டும் என்ற நம்பிக்கையிலேயே இந்த கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளோம்.

அதற்கமைய, ஐக்கிய மக்கள் சக்தியுடனும் சுதந்திரக் கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஏனைய அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

எவ்வித கொள்கையை கொண்டிருந்தாலும் முறையான ஜனநாயகம், பொருளாதாரம், சட்ட ஒழுங்கு தொடர்பில் சகலரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்பதே எங்களின் பிரதான நோக்கமாகும். இதுவரையில் நடந்த பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடியதும் இறுதி முடிவுக்கு வரவுள்ளோம். சுதந்திர மக்கள் சபை என்ற அடிப்படையில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் பாராளுமன்றத்துக்கு வெளியில் செயற்படுபவர்களுக்கு இடையில் ஒரு இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

திட்டமிடப்பட்ட தேர்தலை இரத்து செய்த அரசாங்கமொன்றே தற்போது ஆட்சியில் இருக்கிறது. தேசிய தேர்தலொன்றை இரத்து செய்த அரசாங்கத்துடன் அடுத்த தேர்தல் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது பலனுடையதாக இருக்காது என்றார்.

## விலைக் குறைப்புடன்...

இருந்தபோதும், அந்தக் கோரிக்கைக்கு இதுவரையில் கூட்டுத்தாபனத்தின் தரப்பிலிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை என்பது தெரியவருகிறது.

அதேபோன்று, 'சினோபெக்' நிறுவனத்துக்கு இதுவரையில் நாட்டிலுள்ள 130 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோன்று மேலும் 20 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சினோபெக் நிறுவனத்துக்கு பெற்றுக்கொடுக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. இருந்தபோதும் இன்னும் அந்த 20 எரிபொருள் நிரப்பு நிலையங்களுடன் அரசாங்கம் ஒப்பந்தம் மேற்கொள்ளவில்லை. இதுவரையில் சினோபெக் நிறுவனம் முதலாம் கட்டமாக 42 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருள் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் நாட்டுக்கு இறக்குமதி செய்திருந்தது.

எவ்வாறாயினும், இந்த சிக்கல் நிலைக்கு தீர்வை பெற்றுக்கொடுத்து சினோபெக் நிறுவனத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பிக்க மேலும் இரு வாரங்களாகும் என்று தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

## 'அரகலய' போராட்டம்...

ஏறக்குறைய 60 சதவீத மக்கள் நம்பவில்லை என்றே வெரிட்டே ரிசர்ச் நடத்திய புதிய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளதாக அந்த நிறுவனம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'அரகலய' போராட்டக்காரர்கள் காலிமுகத்திடலில் இருந்து வெளியேறி ஒரு வருடத்துக்குப் பிறகு, இலங்கையின் மறுகட்டமைப்புக்கு ஊழல் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசியமென்று 51 சதவீத மக்கள் கருதுகின்றனர்.

2022 ஏப்ரல் 09ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 10ஆம் திகதிவரை, அரகலய காலிமுகத்திடலில் குறிப்பிடத்தக்க இருப்பைத் தக்க வைத்துக் கொண்டது.

விருப்பங்கள் மற்றும் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டனவா?

'அரகலய' மக்களின் விருப்பங்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்ற வழிவகுத்ததாக நீங்கள் நினைக்கிறீர்களா? என்ற கேள்விக்கு, 60 சதவீதமானோர் பெரும்பாலும் இல்லை என்றும் 11 சதவீதமானோர் பெரும்பாலும் ஆம் என்றும் 29 சதவீதமானோர் அபிப்பிராயம் இல்லை என்றும் பதிலளித்துள்ளனர்.

புதிய பிரதமர், அமைச்சரவை நியமனம் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் என்பன இக்காலப்பகுதியில் இடம்பெற்ற முக்கியமாக நிகழ்வுகளாகும்.

ஆட்சியா, ஸ்திரத்தன்மையா அல்லது பொருளாதார அமைப்பா?

பதிலளித்தவர்களிடம், பின்வரும் கூற்றுகளில், நீங்கள் எதை அதிகம் ஆதரிப்பீர்கள்? என்றும் கேட்கப்பட்டது.

1. நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, ஜனநாயக அவகாசத்தை விட ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம்.

2. நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, ஊழல் மற்றும் மோசமான நிர்வாகத்தை சரிசெய்ய தீர்வு காண வேண்டும்.

3. நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, பொருளாதார அமைப்பை மாற்றுவது அவசியம்.

இதற்கு பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் 51 சதவீதமானவர்கள் ஊழல் மற்றும் மோசமான நிர்வாகத்தை சரிசெய்ய வேண்டியது அவசியம் என்று நம்புகிறார்கள். 34 சதவீதமானவர்கள் பொருளாதார அமைப்பில் மாற்றத்தை விரும்புகிறார்கள் மற்றும் 15 சதவீதமானவர்கள் ஜனநாயக அவகாசத்தை விட ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

### கணக்கெடுப்பு நடத்தப்பட்ட முறை

வான்கார்ட் சர்வே (பிரைவேட்) லிமிடட் வாக்குப்பதிவு பங்காளியாக செயற்படும் வெரிட்டே ரிசர்ச் உருவாக்கிய சிண்டிகேட்டட் கணக்கெடுப்பு (Syndicated Survey) கருவியின் ஒரு அங்கமாக இக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. வெரிட்டே ரிசர்ச்சின் சிண்டிகேட்டட் கணக்கெடுப்பு கருவியானது, இலங்கை மக்களின் உணர்வுகளை அளவிடுவதற்கான வாய்ப்பை மற்ற நிறுவனங்களுக்கும் வழங்குகிறது. 2023 ஜூன் மாதத்தில் தேசிய மட்டத்தில் இலங்கையைச் சேர்ந்த 1,008 வளர்ந்தவர்களின் சீரற்ற மாதிரியை இக் கருத்துக்கணிப்பு கொண்டிருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கோட்டாவின் இறுதிப்பயண...

மாறாக, இந்தத் தகவல்களை வழங்குவதற்கு மேலும் கால நீடிப்பினை வழங்குமாறு கடந்த ஜூலை 02ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 07ஆம் திகதி வரை ஐந்து தடவைகள் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை விமானப் படையின் தகவல் அதிகாரியான எயர் கொமாண்டோ ஈ.டபிள்யூ.ஆர்.ஜயவர்த்தனவினாலேயே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

"குறித்த தகவல்களை வழங்குவதற்காக அந்த தகவல்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தி சரியான முறையில் தயாரிப்பதற்காக மேலும் காலம் தேவைப்படுவதனாலேயே இந்த நீடிப்பினை கோருகின்றோம்" என குறித்த கடிதத்தில் தகவல் அதிகாரி குறிப்பிட்டுள்ளார். கடந்த வருடம் ஜூலை 13ஆம் திகதி இலங்கை விமானப் படைக்கு சொந்தமான விமானத்தின் ஊடாக அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவரது மனைவி மற்றும் இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் மாலைதீவுக்கு சென்றதாக இலங்கை விமானப் படை உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

இந்த விஜயத்துக்கு இலங்கை விமானப் படையினால் எவ்வளவு நிதி செலவளிக்கப்பட்டது? குறித்த நிதியினை செலுத்தியது யார்? போன்ற தகவல்களை கோரிய தகவலறியும் விண்ணப்பம் இலங்கை விமானப் படைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், குறித்த தகவலறியும் கோரிக்கையினை விமானப்படையின் அப்போதைய தகவல் அதிகாரியான எயர் கொமாண்டோ மனோஜ் கெப்பட்டிபொல மற்றும் அப்போதைய குறித்தளிக்கப்பட்ட அதிகாரியான எயார் வைஸ்மார்ஷல் ஆர்.எஸ்.பியன்வில ஆகியோர் நிராகரித்தனர்.

2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 5 (1) டி (i)ஆவது பிரிவுக்கு அமையவே இந்த தகவலறியும் கோரிக்கை நிராகரிப்பதாக அவர்கள் இருவரும் குறிப்பிட்டிருந்தனர். இந்த நிராகரிப்புக்கு எதிராக தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்யப்பட்டது.

குறித்த மேன்முறையீடு தொடர்பான விசாரணைகள் 2023.02.16, 2023.03.01, 2023.04.04 மற்றும் 2023.06.01 ஆகிய திகதிகளில் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்தே மேற்படி தகவல் கோரிக்கைக்கு பதில் வழங்குமாறு தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## பறாளை முருகன்

அறிவித்தலை மீளப் பெற நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வாக்குறுதி அளித்துள்ளார்.

அத்துடன் விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளாமல் எப்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது என தொல்லியல் திணைக்களத்திடம் விசாரணை நடத்தவும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று (10) சந்தித்து பறாளை முருகன் கோவில் விவகாரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள்.

இதற்கு முன்னர் இப்படி ஒரு பிரச்சினை இருப்பதாக தனது கவனத்துக்கு கொண்டு வரவில்லை என்று இந்த சந்திப்பின்போது ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

பறாளை முருகன் ஆலயத்தின் வரலாறு சுமார் 300 ஆண்டுகளுக்கு உட்பட்டது என குறிப்பிட்டு சம்பவத்தின் பின்னணியையும் வரலாற்று சுருக்கத்தையும் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் விளக்கமளித்தார்.

இந்த விவகாரத்தில் 02 உண்மைகளில் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பிட்டனர். இந்த மரம் 300 வருடங்கள் பழமையானது. அவ்வாறிருக்கையில் சங்கமித்தை இலங்கைக்கு 300 வருடங்களுக்கு முன்னரே வந்து விட்டார். பௌத்தம் 300 வருடங்கள் மாத்திரமே பழமையானது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லது இந்த மரம் சங்கமித்தை நாட்டிய மரமல்ல என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளனர். இதனை தொடர்ந்து, பறாளை முருகன் ஆலயத்தின் தல விருட்சமான அரச மரம் சங்கமித்தை நாட்டிய மரமாக இருக்காது என்பது தனது அபிப்பிராயம் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டபோது, நாட்டிய அரச மரங்களை எல்லாம் அழித்து விட்டதாக தெரிவித்தார். மேலும், மரத்தின் ஆயுட்காலத்தை அளவிடும் பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிடுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். அந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரா வர்த்தமானி வெளியிடப்பட்டது என கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பினர். அப்படியான பரிசோதனை எதுவும் மேற்கொள்ளாமல் அது சங்கமித்தை நாட்டிய மரம் என்ற முடிவுக்கு எப்படி தொல்லியல் திணைக்களம் வந்தது எனவும் கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பினர். இதன் மூலம் அந்த வர்த்தமானி இனவாத நோக்கமுடைய சட்டபூர்வமற்ற வர்த்தமானி என்பது புலப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினர்.

இதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி தொல்லியல் திணைக்களம் எந்த விஞ்ஞானபூர்வ நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் எப்படி வர்த்தமானி வெளியிட்டார்கள் என்பது தொடர்பில் உடனடி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க தனது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார். உடனடியாக வர்த்தமானியை மீளப் பெறுவது தென்னிலங்கை தரப்பில் எதிர்ப்பை ஏற்படுத்தி தனக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்பதால் உடனடியாக மரத்தின் ஆயுட்காலத்தை கண்டறியும் விசாரணைகளை நடத்தி வர்த்தமானியை மீளப்பெற நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக சந்திப்பில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

## 13 குறித்த ரணிலின்...

உரிய நேரத்தில் பதில் வழங்குவேன்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு இந்த நாட்டின் அதியுயர் சட்டமாகும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்றமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (09) முற்பகல் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது முன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் பாராளுமன்றத்தில் முன்வைத்து விசேட உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உரை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோது,

"அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் எமது உறுதியான நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்துக்குப் பின்னர் அவர் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்திலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நாம் எழுதிய கடிதத்திலும் தெளிவாகத் தெரிவித்துள்ளோம். இந்நிலையில், 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வின் அவசியம் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையை முழுமையாகக் கேட்டேன். ஆனால், அவரின் உரை தொடர்பில் அவசரப்பட்டு பதிலளிக்க விரும்பவில்லை. உரிய நேரத்தில் பதில் வழங்குவேன்" - என்று குறிப்பிட்டார்.

## பொலிஸ் அதிகாரங்கள்...

கே.சுபானி

13ஆவது திருத்தச் சட்டத்தில் பொலிஸ் அதிகாரப் பகிர்வு தொடர்பில் நேற்றுமுன்தினம் (09) பிற்பகல் பொது பாதுகாப்பு அமைச்சில் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இடையே விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் அதிகாரங்களைக் கோருவதற்கான காரணங்களைக் கேட்டறிந்தார்.

அங்கு உலக நாடுகளை முன்னுதாரணமாக கொண்டு அதிகாரப்பகிர்வின் அவசியத்தை தமிழ்க் கூட்டமைப்பினர் விளக்கியதுடன் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடினர். பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளாமல் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகள் குறித்து அமைச்சர் கலந்துரையாடினார்.

இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் கூட அதிகாரப் பகிர்வு மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டிய தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள், அங்கு பயன்படுத்தப்படும் முறைகளை இலங்கையிலும் நடைமுறைப்படுத்த முடியும் எனவும் விளக்கமளித்தனர். இங்கிலாந்து மற்றும் இலங்கையின் அரசியல் மற்றும் சமூக கலாசாரங்கள் முற்றிலும் வேறுபட்டவை என அமைச்சர் டிரான் அலஸ் சுட்டிக்காட்டினார்.

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் பொது பாதுகாப்பு அமைச்சர் கேட்டறிந்தார்.

மாவட்டக் குழுக்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நீண்ட தூரம் சென்று கொழும்பு வர வேண்டியிருப்பதாலும் சிலரது தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் உள்ளதாலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பான உத்தேச விடயங்களில் புதிதாக எதுவும் சேர்க்கப்படவில்லை எனவும் ஆனால், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக மாகாண பொலிஸ் ஆணைக்குழுவையும் நியமிக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் தமிழ் எம்.பிக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வட மாகாணம் முழுவதும் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் பல சிறுவர்கள் போதைப்பொருளுக்கு அதிகளவில் அடிமையாகி இருப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இதன்போது தெரிவித்தனர்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலக அமைப்புகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் குழுவுக்கு இவ்வாறான விடயங்கள் தொடர்பில் கிடைக்கும் தகவல்களை எந்த நேரத்திலும் வழங்க முடியும் என்றும், அவ்வாறான தகவல்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் எனவும் பொது பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்தார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தலைமையில் உரிய விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான தகவல்களை பிரதிப் பொலிஸ் மா அதிபருடன் எந்த நேரத்திலும் கலந்துரையாட முடியும் எனவும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பொலிஸ் மா அதிபர், சி.டி.சி.டி.விக்ரமரத்ன, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இரண்டு வாரங்களுக்குள் இதுகுறித்து அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்த இரு தரப்பினரும் இணக்கம் கண்டனர்.

## மலையக மக்கள்

''பெருந்தோட்ட "துரைமார்-அடிமைத்தனம்" ஒழிய வேண்டும். இனியும் பொறுக்க முடியாது. எங்களை "இரத்த தேநீர்" என "சிலோன் டீ"க்கு எதிராக பிரசாரம் செய்யும் நிலைக்கு தள்ள வேண்டாம் என எச்சரிக்கிறேன். இந்த நவீன அடிமைத்தனம் இனி முடிவுக்கு வர வேண்டும். இதற்காக மலையக தமிழ் மக்கள் இன்று வேண்டுவது எவரதும் அனுதாபங்கள் அல்ல. எமக்கு தேவை நியாயம்.!

இன்றைய இந்திய அரசு இதை உணர்ந்துள்ளது. ஆகவே எமது மக்களின் நல்வாழ்வுக்காக, முதற்கட்டமாக 300 கோடி இலங்கை ரூபாக்களை பிரதமர் நரேந்திர மோடி நன்கொடையாக ஒதுக்கி தந்துள்ளார். பிரதமர் மோடிக்கு நன்றி. இந்தியாவுக்கு நன்றி.'' என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் முழுநாள் மலையக பெருந்தோட்ட மக்கள் தொடர்பான பிரேரணையை சமர்ப்பித்து மனோ கணேசன் ஆரம்ப உரை நிகழ்த்திய தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

முன்னைய மற்றும் சமீபத்திய கணக்கீடுகள் மற்றும் அறிக்கைகளில் இலங்கை மத்திய வங்கி, உலக வங்கி, ஐ.நா. உலக உணவுத் திட்டம், ஐ.நா. உணவு விவசாய நிறுவனம், சர்வதேச செஞ்சிலுவை சங்கம், நவீன அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் டோமாயோ ஓபகடா ஆகியோர், பெருந்தோட்ட வதிவாளர்களை ஒதுக்கப்பட்ட, நலிந்த, உரிமையற்ற சமூகமாக அடையாளம் கண்டுள்ளனர். மேலும் இன்றைய பொருளாதார நெருக்கடி இந்த பிரிவினரை வறுமை, உணவு பாதுகாப்பின்மை, போசாக்கின்மை ஆகிய துறைகளில் மேலும் மோசமான மட்டங்களுக்கு தள்ளியுள்ளது.

மலையகதமிழ் இலங்கையர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்டப் பிரிவினர், இலங்கையில், 1823இல் முதல் இன்றுவரை 200 வருடங்களை நிறைவு செய்துள்ளனர். பெருந்தோட்ட மக்களின் வாழ்வு, ஏறக்குறைய ஒரே மாதிரியாக மாறாமல், முதலாம் - 125 வருட பிரிட்டிஷ் ஆட்சி, இரண்டாம் - 24 வருட பிரித்தானிய முடியாட்சி கீழான சுதந்திர இலங்கை ஆட்சி, மூன்றாம் - 51 வருட இலங்கை குடியரசு ஆட்சி ஆகிய மூன்று யுகங்களிலும் இருக்கின்றது.

இப்போது தெரிகின்ற ஒரே மாற்றம், வெள்ளை பிரிட்டிஷ் இராஜ்யத்தில் இருந்து, மாநிற பெருந்தோட்ட இராஜ்யத்துக்கு மாறியதுதான். இது இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசில் நிலவும் வெட்கங்கெட்ட நவீன அடிமைத்துவம்.

பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் மிகவும் நலிவடைந்த பிரிவினராக மானிட வளர்ச்சியின் அனைத்து புள்ளி விபரங்களிலும் நாட்டின் ஏனைய மக்களை விட மிகவும் பின்தங்கியுள்ளனர்.

இலங்கை பெருந்தோட்டங்களில் நிலவும் நவீன அடிமைத்துவம் இந்த மக்களை, மனிதாபிமானமற்ற தாழ்நிலை வாழ்நிலைமைகள், அரைகுறை சுகாதார பாதுகாப்பு, போஷாக்கின்மை, மோசமான சிசு - கர்ப்பிணி மரணம், வறுமை, பெண்களின் மீதான அதி மோசமான சுமை, சிறுவர் தொழில், மோசமான பணி நிலைமைகள், குறைந்த சம்பளத்துடன் அதிக நேர வேலை, பாலியல் தொந்தரவு, உடல்ரீதியான மற்றும் வாய்மொழி தாக்குதல் ஆகியவற்றுடன் கூடிய வீட்டு வேலை, சுரண்டல் மற்றும் பாரபட்சம், பெருநிறுவன தோட்டங்களில், அரச தோட்டங்களில், தனியார் சிறு தோட்டங்களில் நியாயமற்ற தினக்கூலி முறைமை, தோட்ட நிர்வாகங்களின் ஒடுக்குமுறைக்கு துணை போகும் பொலிஸ் அதிகாரிகள், சமமற்ற கல்வி வாய்ப்புகள், தரமற்ற கல்வி, பாடசாலைகளிலிருந்து மாணவர் இடை விலகல், சட்ட நீதியை பெரும் வாய்ப்பின்மை, மொழி உரிமையின்மை, வாழ்வதற்கும் வாழ்வாதாரத்துக்கும் நாட்டின் ஏனைய மக்களுக்கும் கிடைக்கும் காணி உரிமை பெருந்தோட்ட மக்களுக்கு மறுக்கப்படுவது ஆகிய கொடுமைகளுடன் வாழ வேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளது.

மலையகதமிழ் இலங்கையர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்டப் பிரிவினரின் சமூக பொருளாதார அந்தஸ்துகளை உயர்த்த, பௌத்த போதனைகள், விசேட ஒதுக்கீட்டு கொள்கைகள் அடிப்படையில், இன மற்றும் அரசியல் பேதங்களுக்கு அப்பால் கரங்கோர்க்குமாறு, இம்மக்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் என்ற முறையில், அரசாங்கத்தையும் சகோதர மக்கள் பிரதிநிதிகளையும் நாம் கோருகிறோம்.

அனுதாபங்களையல்ல, நியாயத்தையே நாம் எதிர்பார்க்கிறோம். இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் உள்வாங்கப்படும் இலங்கையின் முழுமையான பிரஜைகளாவதையே நாம் எதிர்பார்க்கிறோம்.

பெருந்தோட்ட குடியிருப்புகள், இலங்கை தேசிய பொது நிர்வாகக் கட்டமைப்புகளுக்குள் கொண்டு வரப்பட்டு, போதுமான கிராம சேவையாளர் பிரிவுகளும் பிரதேச செயலகப் பிரிவுகளும் உருவாக்கப்பட்டு, நாட்டின் ஏனைய கிராமிய பிரதேச மக்களுக்கு இணையாக, பன்முகப்படுத்தப்பட்ட அரச சேவைகள் மற்றும் நலன்புரி சேவைகளை பெரும் வாய்ப்புகளை ஏற்படுத்தி, பெருந்தோட்ட நிர்வாகங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் என்ற நிலையில் இருந்து விடுபட்டு, முழுமையான பிரஜைகள் என்ற அந்தஸ்து கிராமிய, பிரதேச செயலக, மாவட்ட மட்டங்களில் உருவாக வேண்டும் என நாம் கோருகிறோம்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நடப்பில் உள்ள சனத்தொகை விகிதாசாரத்தை போன்று பெருந்தோட்ட பிரதேசங்களிலும் புதிய பிரதேச சபைகளை நிர்ணயம் செய்து உருவாக்கப்பட வேண்டும் எனவும் நாம் கோருகிறோம்.

## குறுகிய காலத்துக்குள்

இவ்வாறு தெரிவித்தார் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம். பாராளுமன்றத்தில் நேற்று அவர் ஆற்றிய உரையில் மேலும் கூறியதாவது,

நல்லாட்சி அரசாங்கத்தில் இந்த நிலையினை மாற்றியமைக்க நாம் முயற்சிகளை செய்தோம். காலம் காலமாக லயன் குடியிருப்புகளில் வாழும் மலையக மக்களுக்கு 07 பேர்ச் காணியில் தனி வீட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தினோம்.

இந்த வீடமைப்புத் திட்டத்தில் பல வருட காலமாக இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களுக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் மூலமாகவே வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுத்தோம். 4000 இந்திய வீடமைப்புத் திட்டங்களை நிறைவு கட்டத்துக்கு கொண்டு சென்றதோடு 10,000 இந்திய வீடுகளுக்கான ஒப்பந்தத்தினையும் கைச்சாத்திட்டு முன் ஆயத்த வேலைகளை செய்திருந்தோம்.

மலையக மக்களுக்கு காணி உரிமை பற்றி பேசப்பட்டாலும் அதற்கான நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்பதை நாம் அறிவோம்.

இன்றைய எமது நாட்டின் பொருளாதார நிலையில் மலையக மக்கள் எல்லோருக்கும் அரசாங்கம் வீடுகளை கட்டிக்கொடுக்க முடியாது. ஆனால், அவர்களுக்கான காணி வழங்கப்படும் பட்சத்தில் சுயமாகவே வீடுகளை கட்டிக்கொள்ளும் நிலைமை ஏற்படும்.

எனவே, அரசாங்கம் உடனடியாக மலையக மக்களுக்கான 10 பேர்ச் காணியினை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். காணி வழங்கும்போது தொழிலாளர் குடும்பங்கள் மட்டுமல்லாது பெருந்தோட்டங்களிலுள்ள அனைத்து குடும்பங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

மலையக மக்களுக்கு சேவை செய்வதற்கென ஒரு அரச நிறுவனம் கடந்த காலங்களில் இருக்கவில்லை. ஆனால், மலைநாட்டு புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையினை நாம் உருவாக்கினோம்.

இந்த அதிகார சபையின் ஊடாக மலையக மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை செய்வதற்கான பொறிமுறைகளை உருவாக்க முடியும். பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுவரும் இந்த மலையக மக்களின் வாழ்க்கை நிலையினை மாற்றியமைக்க வேண்டும் என்றால் இந்த தொழில் முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

பெருந்தோட்டங்களில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு பெருந்தோட்டங்களை பிரித்து கொடுத்து அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும்.

அதுவே இவர்களின் பொருளாதார நிலையினை மாற்றுகின்ற அதேவேளை, பெருந்தோட்ட துறையினையும் பாதுகாப்பதற்கான வழியாக அமையும். இதே நிலைமையில் போனால் இன்னும் சில வருடங்களில் பெருந்தோட்டங்களில் தொழில் செய்வதற்கு தொழிலாளர்கள் இல்லாமல்போகும் நிலை உருவாகும். அரச கட்டமைப்பில் பின்தள்ளி வைக்கப்பட்டிருந்த நுவரெலியா மக்களை நல்லாட்சி அரசாங்கத்தில் புதிய பிரதேச சபைகளையும் புதிய பிரதேச செயலகங்களையும் உருவாக்கி அரச சேவைகளை இலகுவாக பெற வழி செய்தோம்.

எங்களுக்கு கிடைத்த குறுகிய காலத்துக்குள் பல உரிமை சார்ந்த விடயங்களை செய்திருக்கின்றோம். ஒன்றும் செய்யவில்லை ஒன்றும் செய்யவில்லை என பேசுகின்றவர்கள், நாங்கள் செய்தவற்றை பேசுவதாக இல்லை.

மலையக மக்களுக்கான உரிமை சார்ந்த விடயங்களில் நாம் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

இதுவரை எமக்கு கிடைத்த குறைந்தபட்ச உரிமைகள்கூட தானாக கிடைக்கப்பெற்றவையல்ல. போராட்டங்கள், அழுத்தங்கள் ஊடாகவே பெறப்பட்டவை. அதற்கு அரசியல்வாதிகள் மட்டுமல்லாது ஏனைய சமூக செயற்பாட்டு அமைப்புகளின் ஒத்துழைப்பும் அவசியம்.

மலையக மக்கள் 200 வருடங்கள் என்பதை அனைத்து தரப்பினரும் நினைவுகூர பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வருகின்றனர். தமிழ் முற்போக்கு கூட்டணி 12ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்தில் நடைபயணம் ஒன்றினை ஏற்பாடு செய்திருக்கின்றது.

இந்த நினைவுகூரும் நிகழ்வில் அனைத்து மக்களையும் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அதேவேளை, மன்னாரிலிருந்து மாத்தளை வரை நடைபயணம் செய்கின்றனர். அந்த நிகழ்விலும் கண்டி, மாத்தளை போன்ற மாவட்டங்களில் உள்ள மக்களை கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறான அழுத்தங்களின் ஊடாகவே நாம் நமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்- என்றார்.



# “ஆயுள்வேதம் (திருத்தம்)” சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு

## சபாநாயகருக்குக் கிடைத்துள்ளதாக பாராளுமன்றத்தில் அறிவிப்பு

அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட “ஆயுள்வேதம் (திருத்தம்)” எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று (10) பாராளுமன்றத்துக்கு அறிவித்தார்.

அதற்கமைய “ஆயுள்வேதம் (திருத்தம்)” எனும் சட்டமூலம் அரசியலமைப்புடன் இணங்குகின்றதா இல்லையா என்பது பற்றிய உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் கீழ் வருமாறாகும்:-

(1) சட்ட மூலத்தின் 2, 3, 27, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 39, 40 மற்றும் 41 வாசகங்கள் அரசியலமைப்பின் 9ஆம் உறுப்புரையுடன் முரணாவதுடன் 84ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை வாக்குகளுடனும் மற்றும் 83 ஆம் உறுப்புரையின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் மக்கள் தீர்ப்பொன்றின் மூலமும் மாத்திரமே நிறைவேற்ற முடியும்.

சட்டமூலத்தின் 2, 3, 27, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 39, 40 மற்றும் 41 ஆம் வாசகங்களில் ‘ஆயுர்வேத பைசஜ்ஜக’ மற்றும் ‘பைசஜ்ஜக’ ஆகிய சொற்களை நீக்குவதன் மூலம் திருத்தம் செய்தால் முரண்பாடு நீங்கும்.

(2) சட்டமூலத்தின் 46(4)ஆம் வாசகம் அரசியலமைப்பின் 12(1)ஆம் உறுப்புரையுடன் முரணாவதுடன் 84ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை வாக்குகளினால் மாத்திரமே நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

உயர்நீதிமன்ற தீர்மானத்தின் 53ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் திருத்தங்களை சட்டமூலத்தில் மேற்கொண்டால் இந்த முரண்பாடு நீங்கும்.

(3) சட்டமூலத்தின் 11(3)ஆம் வாசகம் அரசியலமைப்பின் 12(1)ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதுடன் 84ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை வாக்குகளினால் மாத்திரமே நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

உயர்நீதிமன்ற தீர்மானத்தின் 54ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் திருத்தங்களை சட்டமூலத்தில் மேற்கொண்டால் இந்த முரண்பாடு நீங்கும்.

(4) பிரதான சட்டத்தை திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் ஏனைய விடயங்களில், பிரதான சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் (உ) மற்றும் (ஊ) உப பிரிவுகள் நீக்கப்பட்ட சட்டமூலத்தின் 13ஆம் வாசகம் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதுடன் 84 உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை வாக்குகளினால் மாத்திரமே நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

பிரதான சட்டத்தின் 13(1) ஆம் வாசகத்தின் (உ) மற்றும் (ஊ) உப பிரிவுகளை நீக்காவிட்டால் இந்த முரண்பாடு நீங்கும்.

(5) சட்டமூலத்தின் 24(1)(அ), 25 மற்றும் 46(2)ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12(1) உறுப்புரையுடன் முரண்படுவதுடன் 84 உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் தேவையான விசேட பெரும்பான்மை வாக்குகளினால் மாத்திரமே நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

அவ் வாசகங்களை நீக்குவதன்மூலம் முரண்பாடு நீங்கும்.

(6) சட்டமூலத்தின் 46(1) ஆம் வாசகம் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதுடன் 84ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் தேவையான விசேட பெரும்பான்மை வாக்குகளினால் மாத்திரமே நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தின் 55ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள திருத்தங்களை சட்டமூலத்தில் மேற்கொண்டால் இந்த முரண்பாடு நீங்கும்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென பிரதி சபாநாயகர் கட்டளையிட்டார்.

# தினசரி பலாபலன்கள்

## சோபகிருது வருடம் ஆடி மாதம் 26ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்:** குதர்க்கமான பேச்சுகள் வேண்டாம். பணம், பொருள் கைமாறும்போது கவனமாக செயல்படவும்.

**ரிஷபம்:** நண்பர்கள் சந்திப்பால் நல்ல பலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும். நினைத்தது நடக்கும்.

**மிதுனம்:** செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் காயங்கள் ஏற்படலாம். தொழிலில் அக்கறை வேண்டும்.

**கடகம்:** வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும். கேட்ட உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** தொழில் வியாபாரங்கள் சிறக்கும். உங்கள் கீர்த்தி செல்வாக்கு உயரும். அரச வகையில் மேன்மை.

**கன்னி:** திட்டமிட்ட பிரயாணத்தால் நன்மை உண்டு. புதிய நண்பரை சந்திப்பீர்கள். தேவைக்காக பணம் கிடைக்கும்.

**துலாம்:** வீண் பணவிரயம் ஏற்படும். கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள். தொலை தூர பயணங்கள் வேண்டாம்.

**விருச்சிகம்:** காதல் திருமணம் கைகூடி வரும். மாலைவேளையில் மனம் சற்றி தட்டுத்தடுமாறி இயங்கிக் கொண்டிருக்கும்.

**தனுசு:** நினைத்த காரியத்தில் வெற்றி, நோய், கடன் நிவர்த்தி. எதிரிகளை வெற்றிகொள்வீர்கள். புதிய திட்டங்கள் நிறைவேறும்.

**மகரம்:** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நோய்களால் சற்று தொல்லை உண்டு கவனம்.

**கும்பம்:** குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். உடல் நலனில் அக்கறை வேண்டும்.

**மீனம்:** காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய துணிமணிகள் வாங்கி அணிவீர்கள். மன மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

**திதி:** ஏகாதசி முழுவதும் (தேய்)
**நட்சத்திரம்:** மிருகசீரிடம் பி.இ. 6.02 வரை பின் திருவாதிரை
**யோகம்:** அமிர்த யோகம் முழுவதும்
**வாரசூலை:** மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 6.05 – 7.05 மணிவரை
**ராகுகாலம்:** 10.35 – 12.05 மணிவரை
**எமகண்டம் :** 3.05 - 4.35 மணிவரை
**குளிகை:** 7.35 – 9.05 மணிவரை
**சந்திராஷ்டமம்:** துலா-விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** ரோஹிணி, அத்தம், திருவோணம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** ஏகாதசி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# இலங்கையை முக்கிய பங்காளியாக பார்க்கிறோம்

## இலங்கைக்கான இந்தோனேஷியத் தூதுவர் தெரிவிப்பு

ஆசியான் அமைப்பு, இலங்கையை ஒரு முக்கியமான பிராந்திய பங்காளியாகப் பார்க்கிறது. இலங்கையில் ஆசியான் தூதுக்குழு பலதரப்பட்ட தரப்பினருடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன என இலங்கைக்கான இந்தோனேஷியத் தூதுவர் திருமதி டிவி குஸ்டினா டோபிங் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தோனேஷியத் தூதரகத்தில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற 56ஆவது “ஆசியான்” தின கொண்டாட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், 670 மில்லியனுக்கும் அதிகமான மக்களுடன், உலக சனத்தொகையில் சுமார் 8.8%, ஆசியான் அமைப்பு என்பது உலகளவில் மூன்றாவது பாரிய சந்தையாகும்.

ஆசியான் அமைப்பு, இலங்கையை ஒரு முக்கியமான பிராந்திய பங்காளியாகப் பார்க்கிறது. இலங்கையில் ஆசியான் தூதுக்குழு பலதரப்பட்ட தரப்பினருடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. ஆசியான் அமைப்பு, இலங்கையுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தவும் மக்களிடையேயான உறவுகளை மேம்படுத்தவும் தயாராகவுள்ளது.

அமைதியான, நிலையான மற்றும் வளமான இந்து-பசுபிக் பிராந்தியத்தை உருவாக்குவதே ஆசியான் அமைப்பின் எதிர்பார்ப்பாகும். இந்து-பசுபிக் பிராந்தியத்தில் தொடர்புகளை வலுப்படுத்த விரும்பும் நாடுகளுக்கு ஆசியான் எப்போதும் திறந்திருக்கும்.

ஆசியான் அமைப்பின் அபிவிருத்தியின் பிரதிபலன்களை இலங்கைக்கு வழங்குவதற்கு இலங்கையுடன் தொடர்ந்து பணியாற்றுவோம். பொருளாதாரம், பாதுகாப்பு, சுகாதாரம், சூழல் மற்றும் சமூக-கலாசார, காலநிலை மாற்றம் உள்ளிட்ட பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்கு, விதிகள் அடிப்படையிலான சர்வதேச செயல்முறையை வலுப்படுத்துவது உட்பட பகிரப்பட்ட மதிப்புகள், கொள்கைகள் மற்றும் ஆர்வங்கள், உலகெங்கிலும் உள்ள நாடுகளுடன் உறவுகளை நிர்வகிப்பதற்கான அடிப்படையை உருவாக்குகின்றது.

அந்த அடிப்படையின் கீழ், இலங்கையுடன் கட்டியெழுப்பப்பட்ட கூட்டிணைவு பல வருடங்கள் மற்றும் பல தசாப்தங்களுக்கு தொடர்ந்து வளர்ச்சியடையும் என்று நாம் அனைவரும் உண்மையாக எதிர்பார்த்துள்ளோம்.

ஆசியானின் 57 ஆண்டுகளில், பொதுவான சவால்களை கூட்டாக எதிர்கொள்ளவும் அனைவருக்கும் அதிக வாய்ப்புகளைக் கொண்டு வருவதற்கு ஒருவருக்கொருவர் ஒத்துழைப்போம் என்ற உறுதிமொழியை புதுப்பிப்போம் என்றார்.

# புதிய பொருளாதாரக் கொள்கைக்குத் தேவையான முன்மொழிவுகளை பரிந்துரைக்க அறிஞர் குழாம்

## நியமிக்க துறைசார் மேற்பார்வைக் குழு தீர்மானம்





நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டிய வரி முறைமை மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய பொருளாதாரக் கொள்கைகள் குறித்த முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்குப் பல்கலைக்கழக சமூகத்தினர் உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவை நியமிப்பதற்குப் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தலைமையில் அண்மையில் கூடிய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டத்திலேயே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பின்னடைவின் பாதிப்புகள் மற்றும் அவற்றிலிருந்து மீள்வதற்கு எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக இக்குழு கூடியிருந்தது. இக்கூட்டத்துக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், பொருளியல் மற்றும் முகாமைத்துவப் பீடங்களின் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் தலைவர்கள், மத்திய வங்கி மற்றும் திறைசேரியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் அழைக்கப்பட்டிருந்தனர்.

நாட்டில் பல்வேறு கொள்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளபோதும் தேசிய நிதிக் கட்டமைப்பொன்று இதுவரை இல்லையென்றும் இதனை விரைவில் தயாரிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் குழுவின் தலைவர் வலியுறுத்தினார். நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரைத் தெளிவுபடுத்தி பாராளுமன்றத்தின் ஊடாக உரிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் இந்த செயற்பாட்டில் பல்கலைக்கழக சமூகத்தினர் உள்ளிட்ட சகல தரப்பினரையும் ஒன்றிணைக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயங்களைத் தொடர்ந்து முன்கொண்டு செல்வதற்கும் சம்பந்தப்பட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கும் நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை இரண்டு வாரங்களுக்குள் நியமிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

முறையான வரிக்கொள்கை இல்லாமை, அரசாங்க நிறுவனங்களின் வினைத்திறன் அற்ற தன்மை, தொழிற்சந்தைக்கு ஏற்ற கல்விக்கொள்கை இல்லாமை போன்ற பல்வேறு விடயங்கள் நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள நிலைமைக்குக் காரணமாகியிருப்பதாக இங்கு வருகை தந்திருந்த கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டினர். இலங்கையில் தேவைக்கும் அதிகமான கொள்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளபோதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலேயே குறைபாடு காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, அநுர பிரியதர்ஷன யாப்பா, சரத் வீரசேகர, மொஹமட் முஸம்மில், மதுர விதானகே, கெவிந்து குமாரதுங்க, சஹான் பிரதீப் மற்றும் வசந்த யாப்பா பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒகஸ்ட் 11ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# பாகிஸ்தானின் பொதுத் தேர்தல்!

கடுமையான நிதி நெருக்கடி, ஸ்திரமற்ற அரசியல் சூழல் என தவித்துவரும் பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு திடீரென பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. இதற்கான உத்தரவை ஜனாதிபதி ஆரிப் ஆல்வி பிறப்பித்திருந்தார். பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிய 3 நாட்கள் எஞ்சியிருந்த நிலையில், பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் பரிந்துரையில் முன்கூட்டியே நேற்றுமுன்தினம் நள்ளிரவில் கலைக்கப்பட்டது.

பாகிஸ்தானில் கடந்த 2018இல் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. இதில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் அங்கு கூட்டணி ஆட்சி அமைந்தது.இம்ரான் கானின் தெஹ்ரிக் இ இன்சாஃப் கட்சியின் தலைமையில் கூட்டணி ஆட்சி அமைந்தது. பிரதமராக அவர் 4 ஆண்டுகள் இருந்துவந்த நிலையில், அந்த ஆட்சிக்கு ஆதரவு அளித்துவந்த முக்கிய கட்சி ஆதரவை விலக்கிக்கொள்ள அவர் நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோல்வியுற்று பதவியிழந்தார்.

இதையடுத்து எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடித்தன. பாகிஸ்தான் பிரதமராக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் ( பி.எம்.எல்.-என்) கட்சியின் தலைவரான ஷெபாஸ் ஷெரீப் பொறுப்பேற்றார். இந்நிலையில், நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவதற்கு 3 நாட்களுக்கு முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. இது பாகிஸ்தான் அரசியல் கட்சிகள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானிலும் இலங்கையைப் போல 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. பாராளுமன்றப் பதவிக்காலம் முடிந்து 60 நாட்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டும். ஆனால், பாராளுமன்ற பதவிக்காலம் முடியும் முன்னரே அதனைக் கலைத்தால் 90 நாட்களில் பாராளுமன்றத் தேர்தலை நடத்திக்கொள்ளலாம். கூடுதலாக 30 நாட்கள் கிடைக்கும் என்பதாலேயே பிரதமர் நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைக்க பரிந்துரைத்ததாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

அண்மையில்தான் அரசு பரிசுப் பொருட்கள் ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். நீதிமன்றத் தீர்ப்பின்படி இம்ரான் கான் 5 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட முடியாது. இனி பாராளுமன்றத் தேர்தல் நடத்தினால் இம்ரான் கான் இல்லாத களத்தை சந்திக்கலாம் என்பதாலேயே பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டதாக இம்ரான் கான் கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர் .

ஊழல் வழக்கில் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து, கைதுசெய்யப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சியின் தலைவருமான இம்ரான் கான் இந்தத் தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் அதிக இடங்களில் வெற்றிபெற்று பிரதமராகப் பொறுப்பேற்ற இம்ரான் கான் 2022 ஆம் ஆண்டு ஏப்ரலில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்ததால் பதவியிழக்க நேர்ந்தது. பிரதமர் பதவியை இழந்ததிலிருந்து அவர் மீது ஊழல், கொலை, பயங்கரவாதம், தேசத் துரோகம் என்ற பல்வேறு குற்றச்சாட்டுகளில் 150க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தனது பதவிக் காலத்தில் வெளிநாட்டுத் தலைவர்கள் வழங்கிய விலை உயர்ந்த பரிசுப் பொருட்களை மறைத்து வைத்தது, அரச திறைசேரியிலிருந்து பரிசுப் பொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்கி சட்டவிரோதமாக அதிக விலைக்கு விற்றது ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து இஸ்லாமாபாத் மாவட்ட நீதிமன்றம் ஒகஸ்ட் 5 அன்று உத்தரவிட்டது.

இம்ரான் கைதுசெய்யப்படுவது, கடந்த மூன்று மாதங்களில் இது இரண்டாவது முறையாகும். அல் - காதிர் அறக்கட்டளை ஊழல் வழக்கில் இம்ரான் கான் கடந்த மே 9ஆம் திகதி கைதுசெய்யப்பட்டபோது பயங்கர கலவரம் வெடித்தது. இந்த முறை இம்ரான் கைதுசெய்யப்பட்டபோது அதுபோன்ற சம்பவம் எதுவும் நிகழவில்லை.

மே 9 கலவரத்தின்போது இம்ரான் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் நிறையப்பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் அரசுத் தரப்புக்கு ஒத்துழைக்க மறுத்தவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டு கடும் சித்திரவதைக்கு உள்ளானார்கள்.

ஒரு காலகட்டத்தில் இம்ரானுக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்த தொழிலதிபரான ஜெஹாங்கீர் தரீன் இம்ரானுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியதுடன், அரசுக்கு ஆதரவான நிலைப்பாடுடைய புதிய கட்சியை கடந்த ஜூன் மாதத்தில் தொடங்கினார். பாராளுமன்றத்திலும் மாகாண சட்டப்பேரவைகளிலும் உறுப்பினர்களாக இருந்த இம்ரான் கட்சியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்தக் கட்சியில் இணைந்தனர்.அதனால், இம்ரான் முன்பு கைதுசெய்யப்பட்டபோது நிகழ்ந்தது போன்ற கலவரம் இப்போது நிகழவில்லை.

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர்கள் கைதுசெய்யப்படுவது புதிதொன்றுமல்ல. இந்தக் கைதுப்படலம் 1960களிலேயே தொடங்கிவிட்டது. இராணுவத்துடன் முரண்படுபவர்கள் இதே கதியைத்தான் சந்திக்க நேரிட்டு வருகிறது. 1962இல் வங்கத்தை (இப்போதைய வங்கதேசம்) சேர்ந்த ஹுசைன் ஷஹீத் சுஹ்ராவர்தி, 1974இல் சுல்பிகார் அலி பூட்டோ ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பின்னர், பூட்டோவின் மகள் பெனாசிர் பூட்டோ, நவாஸ் ஷெரீப் போன்றவர்கள் பல்வேறு வழக்குகளில் பலமுறை கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் சுல்பிகார் அலி பூட்டோ 1979இல் தூக்கிலிடப்பட்டார். சிறையில் அடைக்கப்படுவதைத் தவிர்க்க பெனாசிரும் நவாஸும் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

2018இல் இராணுவத் தலைமைத் தளபதி கமர் பாஜ்வாவின் ஆதரவுடன் இம்ரான் ஆட்சியைக் கைப்பற்றினார். காலப்போக்கில் இராணுவத் தலைமையுடன் கருத்து வேறுபாடு அதிகரித்ததால் 2022 ஏப்ரலில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார்.

ஆனாலும், மக்களின் நம்பிக்கையைப் பெற்றவராகவே இம்ரான் விளங்கினார். பிரதமர் பதவியிலிருந்து இம்ரான் கான் அகற்றப்பட்டதைக் கண்டித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டுப்பேர் இராஜினாமா செய்தனர். கைபர் பக்துன்க்வா, பஞ்சாப் மாகாணங்கள், கராச்சி நகருக்கு உட்பட்ட அந்த எட்டு தொகுதிகளுக்கு கடந்த ஒக்டோபரில் நடைபெற்ற தேர்தலில் இம்ரான் கான் ஏழு தொகுதிகளில் தானே போட்டியிட்டு 6இல் வென்று வரலாறு படைத்தார்.

இந்தத் தேர்தலுடன் பஞ்சாப் பேரவையின் மூன்று தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் இம்ரான் கட்சி இரண்டு தொகுதிகளைக் கைப்பற்றியது. பாகிஸ்தானின் மிக முக்கியமான மாகாணமாகக் கருதப்படும் பஞ்சாபில் இம்ரான் கட்சியைச் சேர்ந்த 20 பேர் அணி மாறியதால் 2022ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் அந்த 20 தொகுதிகளில் 15ஐ அவரது கட்சி கைப்பற்றியது.

இந்தச் சூழலில்தான் இம்ரான் கானை பலவீனப்படுத்தி மீண்டும் தலையெடுக்கவிடாமல் செய்வதற்காக தொடர்ந்து வழக்குகள் பதிவு செய்வது, நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் அவரை சிறையில் அடைப்பது, கட்சியை உடைப்பது, முக்கிய பிரமுகர்களை சிறையில் அடைப்பது போன்ற பல்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன.

பாகிஸ்தானில் கடந்த 75 ஆண்டுகளில் எந்தவொரு பிரதமரும் ஐந்து ஆண்டுகள் முழுமையாக ஆட்சியில் இருந்ததில்லை. ஏற்கனவே பொருளாதார ரீதியில் கடுமையான சவால்களை அந்த நாடு சந்தித்து வருகிறது. ஒவ்வொரு முறையும் சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எவ்.), உலக வங்கி, சீனா போன்றவை நிதியுதவி அளித்து கைதூக்கிவிடுகின்றன.

ஏற்கனவே மூச்சுத்திணறலில் உள்ள ஜனநாயகத்தை புதைகுழியில் போட்டு மூடும் நடவடிக்கைகளை இராணுவத் தலைமையும் ஆட்சியாளர்களும் மேற்கொண்டால் அது அந்த நாட்டுக்குத்தான் பாதகமாக முடியும்.இம்ரானின் கைது, தேர்தலில் எதிரொலிக்கும் என்பதால் இம்முறை பாகிஸ்தானில் நடக்கவிருக்கும் தேர்தல் என்றுமில்லாத வன்முறைகள் கொண்ட ஒரு தேர்தலாகவே இருக்கப்போகிறது.



# செயற்கை நுண்ணறிவிலும் போலிகள்: செய்ய வேண்டியது என்ன?

-வினோத் ஆறுமுகம் -



அமெரிக்காவில் வசிக்கும் ரொபர்ட் வில்லியம்ஸ் கறுப்பினத்தவர். அன்று அவருக்குப் பிறந்தநாள். வீட்டில் தன் மனைவி- குழந்தைகளுடன் பிறந்தநாளைக் கொண்டாடிக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த பொலிஸார், முந்தைய நாள் இரவு கடை ஒன்றில் ரொபர்ட் திருடியதாகவும், கைது செய்வதற்கான ஆணையுடன் வந்திருப்பதாகவும் சொல்லி அவரைக் கைதுசெய்து விட்டார்கள்.

### தவறிழைத்த தொழில்நுட்பம்:

ரொபர்ட் கடை ஒன்றில் மேலாளராகப் பணியாற்றுபவர். ஒருநாளும் திருடியதில்லை. குறிப்பாக, அவர்கள் சொல்லும் நேரத்தில் அவர் வீட்டில்தான் இருந்துள்ளார். ஆனால்,பொலிஸார் ரொபர்ட்டைத் துருவித்துருவி விசாரித்தனர். சாட்சியமாக அவர்கள் காட்டியது திருடப்பட்ட கடையின் கண்காணிப்பு கமராவில் பதிவாகியிருந்த மங்கலான ஓர் ஒளிப்படம். பார்ப்பதற்கு ரொபர்ட் போலத்தான் தெரிந்தது. இரண்டு நாட்கள் கழித்துதான் பொலிஸாருக்கு உண்மை தெரியவந்தது. ரொபர்ட் திருடவில்லை என்று.

தாங்கள் பயன்படுத்திய செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மென்பொருள் தவறுதலாக அவரைக் காட்டிவிட்டது. மென்பொருள் சொன்னதை நம்பி ரொபர்ட்டைக் கைதுசெய்து விட்டார்கள். ரொபர்ட்டின் நல்ல நேரம் - மென்பொருள் செய்த தவறை பொலிஸார் ஒப்புக்கொண்டார்கள். பொதுவாக அப்படியெல்லாம் நடப்பதில்லை. உலகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்படும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பப் பயன்பாட்டில் இருக்கும் அபாயங்களில் ஒன்று இந்தச் சம்பவம்.

### பாம்பு எண்ணெய்:

இன்றைக்குச் செயற்கை நுண்ணறிவு தொடர்பான துறையில் முதலீடுகள் குவிகின்றன. அனைத்து நிறுவனங்களும் தங்கள் மென்பொருள்களில் ஏதோ ஒரு விதத்தில் செயற்கை நுண்ணறிவு இருப்பதாக விளம்பரம் செய்ய வேண்டும் எனத் துடிக்கின்றன.

தேவையற்ற இந்த அவசர துடிப்புத்தான் செயற்கை நுண்ணறிவு தொடர்பான தவறுகளுக்கு இட்டுச் செல்கிறது. பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் செயற்கை நுண்ணறிவு தொடர்பாக ஆய்வுகள் செய்யும் அரவிந்த் நாராயணன், முதல் முறையாகப் போலி செயற்கை நுண்ணறிவு மென்பொருட்களைப் பற்றிப் பேசினார். அதற்கு அவர், 'ஏஐ ஸ்நேக் ஆயில்' (AI Snake Oil) என்று பெயரிட்டார்.

19ஆம் நூற்றாண்டுகளின் இறுதியில் அமெரிக்காவில் தங்க வேட்டைக்குப் புறப்பட்ட மக்கள் பலர் சீனர்களை வேலையாட்களாகக் கொண்டுவந்து சுரங்கங்களைத் தோண்ட வைத்தனர். அப்படி வேலைக்கு வந்த சீனர்கள் உடல்வலியைப் போக்குவதற்காக ஒரு குறிப்பிட்ட பாம்பின் கொழுப்பிலிருந்து செய்யும் மருந்தைப் பயன்படுத்தினார்கள். அந்த மருந்து, 'பாம்பு எண்ணெய் மருந்து' என அழைக்கப்பட்டது.

இதையடுத்து, மோசடிப் பேர்வழி ஒருவர் போலியாகச் சில எண்ணெய்களைக் கலந்து அது பாம்பு எண்ணெய் மருந்து என்றும் அது சர்வரோக நிவாரணி என்றும் விளம்பரப்படுத்திப் பல்லாயிரம் டொலர்களைச் சம்பாதித்துவிட்டார். அன்றிலிருந்து போலியான பொருட்களுக்கு 'பாம்பு எண்ணெய்' என்று பெயரிடப்படுவது அமெரிக்காவில் வாடிக்கை. அதை அடிப்படையாகக் கொண்டே போலி செயற்கை நுண்ணறிவு மென்பொருட்களை அவ்வாறு அழைக்கிறார் அரவிந்த் நாராயணன்.

### ஏமாற்று வேலைகள்:

'இவை செயற்கை நுண்ணறிவு கொண்டவை. வர்த்தகத்தில் பலவித மாயாஜாலங்களை நிகழ்த்தும்' என்று மார்க்கெட்டிங் நபர்களால் பொய் சொல்லப்பட்டு போலியான ஏஐ மென்பொருட்கள் விற்கப்படுகின்றன. இதை நம்பி வாங்கும் நிறுவனங்களும் தாங்கள் செயற்கை நுண்ணறிவு மென்பொருளைக் கொண்டு தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதாகவும் அதன் மூலம் சரியான முடிவை எடுப்பதாகவும் தவறாக எண்ணிக்கொண்டு ஏமாந்துபோகின்றனர்.

ஏஐ மென்பொருட்கள் இயங்குவதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதைப் பற்றி ஆய்வாளர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகிறார்கள். கூகுள் நிறுவனம் உருவாக்கிய ஒளிப்படம் தொடர்பான செயற்கை நுண்ணறிவு கறுப்பு இனத்தவர்களை கொரில்லா குரங்குகள் என வகைப்படுத்தி அவர்களை வருத்தமடைய வைத்தது.

இது தொடர்பான புகார் வந்ததும் கூகுள் நிறுவனத்தின் ஒளிப்பட மென்பொருள் 'கொரில்லா' என எந்த ஒளிப்படத்தையும் லேபிள் செய்வதை அறவே நிறுத்திவிட்டது. பல ஆய்வுகளில் செயற்கை நுண்ணறிவு மென்பொருட்கள் கறுப்பினத்தவர்களைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத சிக்கலில் இருப்பதைச் சுட்டிக்காட்டி உள்ளார்கள்.

குறிப்பாக, முகத்தைக் கொண்டு குறிப்பிட்ட நபரைக் கண்டறியும் செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் (Facial recognition systems) வெள்ளை இனத்து மக்களைச் சரியாகக் கண்டறிவதும் அதே கறுப்பினத்தவர்கள் என்றால் அதில் நிறைய தவறுகள் நிகழ்வதும் ஆராய்ச்சிகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இப்படியான சிக்கல்கள் இருக்கும்போது செயற்கை நுண்ணறிவு மென்பொருள் என்று ஒரு மென்பொருளை எப்படி உருவாக்குகிறார்கள்? இது செயற்கை நுண்ணறிவு மென்பொருள் என்று ஒரு மார்க்கெட்டிங் நபர் சொல்லி, சில மாதிரிகளைக் காட்டுவதை மட்டும் வைத்துக்கொண்டு, அந்த மென்பொருளை நம்பிப் பலரின் எதிர்காலத்தை அதனிடம் எப்படி ஒப்படைப்பது? இன்று பல நிறுவனங்களின் மனிதவள மேலாண்மையில் செயற்கை நுண்ணறிவு மென்பொருட்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

கொடுக்கப்படும் தகவல்களில் இருந்து கற்றுக்கொள்வதுதான் இந்த வகை மென்பொருட்களின் அடிப்படை அம்சம். சில பணிகளில் ஏற்கனவே ஆண்களே அதிக அளவில் பணிபுரிவதால் அதே வேலைக்குச் சுய விவரக் குறிப்புகளைத் தேர்ந்தெடுக்கும்போது அந்த மென்பொருள் ஆண்களின் சுயவிவரக் குறிப்புகளை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொடுத்தது தெரியவந்திருக்கிறது.

செயற்கை நுண்ணறிவில் இப்படியான சிக்கல்கள் இருக்கும்போது போலியான செயற்கை நுண்ணறிவு மென்பொருட்களை பொலிஸாரோ ஒரு நிறுவனத்தின் மனிதவள மேலாண்மைத் துறையோ பயன்படுத்தினால் எவ்வளவு ஆபத்து என்பது புரிகிறதா?

### என்ன தீர்வு?

- ஒரு செயற்கை நுண்ணறிவு மென்பொருள் சரியான மென்பொருள்தானா என்பதைப் பல சோதனைகள் மூலம் கண்டறிய முடியும். உண்மையில், இது செலவு பிடிக்கும் விஷயம். ஆனால், சில மாதங்களாவது சோதனை நிலையில் வைத்து செலவுசெய்து கண்டுபிடித்தால்தான் அந்தச் செயற்கை நுண்ணறிவின் பலனை ஒரு நிறுவனம் ஓரளவுக்குப் பெற முடியும். ஆனால், இன்றைக்குப் பல நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு மென்பொருளை வாங்குவதற்குக் காரணம், மனித வளத்தைக் குறைத்து அதன் மூலம் சம்பளச் செலவைக் குறைத்து, இலாபத்தை அதிகரித்துக்கொள்ளலாம் என்பதுதான்.

அப்படியான நிறுவனங்கள் ஒருபோதும் பணத்தைச் செலவுசெய்து செயற்கை நுண்ணறிவு மென்பொருட்களைச் சோதனை செய்யப்போவதே இல்லை. செலவு செய்யவும் முடியாது. அதேநேரம், சரியான செயற்கை நுண்ணறிவு மென்பொருளும் வேண்டும் என்பது சாத்தியமற்றது. நீங்கள் ஆரம்பத்தில் சிறிதளவாவது பணம் செலவுசெய்து சோதனைகளில் ஈடுபட்டால்தான் பிற்காலத்தில் ஓரளவு பணத்தை மிச்சம் பிடிக்க முடியும்.

இதற்கிடையே செயற்கை நுண்ணறிவு தொடர்பாகப் பரவிவரும் ஆர்வத்தைப் பயன்படுத்திக்கொள்வதில் பல நிறுவனங்கள் முனைப்புக் காட்டுகின்றன. அரவிந்த் போன்ற ஆராய்ச்சியாளர்கள் இதைச் சுட்டிக்காட்டியதால் அமெரிக்காவில் இதற்கான சட்டங்கள் வந்துள்ளன.

ஐரோப்பாவில் போலி செயற்கை நுண்ணறிவு மென்பொருட்களைக் கண்காணிப்பதையும் அவை எங்கே, எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன, அவற்றின் பகுப்பாய்வுகள் சரியாக இருக்கின்றனவா என்பதை ஆராய்வதையும் நிறுவனங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கும் சட்டங்களும் வரவிருக்கின்றன.

பல நாடுகளில் இதுபோன்ற மென்பொருட்கள் ஏற்கனவே வந்துவிட்டிருக்கலாம். அவற்றின் உண்மைத்தன்மை தெரியாமல் பலரின் வாழ்க்கை கேள்விக்குறியாகலாம். அரசுகள் இதற்கான ஒரு வழிகாட்டுதலையும் சட்ட வரையறையையும் விரைவாகக் கொண்டுவர வேண்டும்.

நன்றி - இந்து தமிழ்








வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சியும் பத்திரிகையும் கையளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (10) காலை கல்வியங்காட்டில் இடம்பெற்றது.

படம்: யாழ். நிருபர்

## நக்கல் நமசிவாயம்

பொலிஸ் அதிகாரங்கள் எங்களுக்கு கிடைச்சா மட்டும் பிரச்சினை தீர்ந்திடுமோ? இல்ல தெரியாமத்தான் கேட்குறன்..!



## இன்றைய நாளில்...

- 1812 – இலங்கையில் பேராதனை தாவரவியற் பூங்கா அமைக்கப்பட்டது.
- 1984 – தேர்தல் பரப்புரைக்காக வானொலி ஒன்றில் தனது குரலை சோதிப்பதற்காக அமெரிக்க அரசுத்தலைவர் ரொனல்ட் ரேகன் "எனது சக அமெரிக்கர்களே, உருசியாவை அழிப்பதற்கான சட்டவாக்கத்திற்கு இன்று ஒப்புதல் அளித்திருக்கிறேன். இன்னும் ஐந்து நிமிட நேரத்தில் குண்டுவீச்சு ஆரம்பமாகும்" எனக் கூறினார்.
- 1999 – ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் முழுமையான சூரிய கிரகணம் தென்பட்டது.
- 2006 – யாழ் - இலங்கையின் தென்பகுதியை இணைக்கும் ஏ9 நெடுஞ்சாலை காலவரையறையின்றி மூடப்பட்டு யாழ்ப்பாண மக்கள் குடாநாட்டுக்குள் முடக்கப்பட்டனர். 2009 இலேயே மீண்டும் திறக்கப்பட்டது.

### 13ஆம் திருத்தம் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியல்ல; தீர்வுமல்ல;

# இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரேவழி தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டியே

## த.தே.ம.முன்னணி கடிதம்



13ஆம் திருத்தம் தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியுமல்ல; தீர்வுமல்ல; இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரேவழி தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டியே - என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கட்சித் தலைவர்களிடம் கோரப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு தொடர்பில் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரின் ஒப்பமிட்ட கடிதம் நேற்று அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதில், 13ஆம் திருத்தம் இனப்பிரச்சினைத் தீர்வின் தொடக்கப் புள்ளியாகவோ இறுதித் தீர்வாகவோ ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெளிவுபடுத்தி 1987ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தரப்புகளால் 13ஆம் திருத்தம் நிராகரிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டி வடக்கு - கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை, அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசியல் யாப்பின் மூலம் மட்டுமே 75 வருடங்களாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்பதைத் தெளிவுபடுத்தி கடிதம் எழுதப்பட்டுள்ளது.

13ஆம் திருத்தம் 1987 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டபோது அதனைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தொடக்கப்புள்ளியாகக் கூட ஏற்றுக்கொள்ள முடியாதெனக் குறிப்பிட்டு அதனைச் சட்டமாக நிறைவேற்ற அனுமதிக்க வேண்டாமென்றும் அதனைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி அப்போதய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம், செயலாளர் அமிர்தலிங்கம், சிரேஷ்ட உபதலைவர் இரா. சம்பந்தன் ஆகியோர் ஒப்பமிட்டு அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு அனுப்பிய கடிதமும் இணைக்கப்பட்டுள்ளதுடன்,

கடந்த 2016ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து தயாரித்த தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு யோசனை வரைபும் இணைத்து நேற்று கட்சித் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் கையளிக்கப்பட்டது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## வவுனியாவில் வாள்வெட்டுக் குழு அட்டகாசம்: புலனாய்வுத்துறை உத்தியோகத்தர் மீதும் தாக்க முயற்சி

*வவுனியா நிருபர்*

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் வாள்வெட்டுக் குழுவொன்று வாள் வீசி அட்ட காசம் செய்துள்ளதுடன், அதனைத் தடுக்கச்சென்ற புலனாய்வுத்துறை உத்தியோகத்தர் மீதும் தாக்குதல் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் (09) மாலை வவுனியா, வைரவபுளியங்குளம், யங்ஸ்ரார் விளையாட்டு மைதானம் முன்பாக குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, வைரவபுளியங்குளம், யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தின் முன் வீதியில் நின்ற சில இளைஞர்கள் மீது மோட்டர்சைக்கிளில் வாள்களுடன் வந்த சிலர் வாள் வீசி தாக்குதல் மேற்கொள்ள முற்பட்டதுடன், சிறிது நேரம் அப்பகுதியில் வாள்களுடன் நின்று அட்டகாசம் செய்துள்ளனர்.

இதனால் அவ்வீதியில் பயணித்த தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று வந்த மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலரும் வீதியோரத்தில் அச்சத்தில் நின்றுள்ளனர். இதன்போது அப்பகுதிக்கு வந்த புலனாய்வுத் துறை உத்தியோகத்தர் ஒருவர் குறித்த இளைஞர்களைக் கட்டுப்படுத்த முயன்றுள்ளார். அவர் தான் புலனாய்வுத் துறை என்பதை உறுதிப்படுத்தியபோதும் அவர் மீது வாள் வீசி தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்துள்ளனர்.

குறித்த இடத்துக்குப் பொலிஸார் வருகை தந்தபோது வாளுகளுடன் நின்றவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர். இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணை எவருக்கும் இல்லை

### வடக்கு ஆளுநர் திட்டவட்டம்

*வவுனியா நிருபர்*

வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணையை எவருக்கும் கையளிக்கும் தீர்மானம் இல்லை - என வடமாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

வவுனியா குடிமக்கள் பேரவை, வவுனியா அரச விதை உற்பத்திப்பண்ணையை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதை தடுக்கக் கோரியும் அவ்வாறான திட்டமிருக்கும் பட்சத்தில் அதனைக் கைவிடுமாறும் வடமாகாண ஆளுநருக்கு கடிதம் மூலமாக தெரியப்படுத்தியிருந்தது.

இதற்குப் பதிலளித்துள்ள உதவி காணி ஆணையாளர் க. சிவப்பிரியா வவுனியா அரச பண்ணையை எவருக்கும் கையளிக்கும் தீர்மானம் இல்லையென வடக்கு ஆளுநர் தெரிவித்துள்ளதாக குடிமக்கள் பேரவைக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

# மடு திருத்தலத்தின்

## ஆவணித் திருவிழா தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல்



*மன்னார் நகர் நிருபர்*

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 7 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்துகொள்ளவுள்ள நிலையில், வருகை தரும் பக்தர்களின் நலனைக் கருத்திற்கொண்டு சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன – என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா தொடர்பாகவும் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயும் 2ஆவது கூட்டம் நேற்று முன்தினம் (09) புதன்கிழமை காலை 11 மணியளவில் மடு திருத்தல மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 7 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக உரிய திணைக்களங்களின் உதவியோடு, மடு திருத்தலத்துக்கு வரும் மக்களின் தேவைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக, நீர், சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து போன்ற தேவைகளை உரிய திணைக்களங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நவநாள் திருப்பலிகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை மாலை வேஸ்பர் ஆராதனையும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

இம்முறை திருவிழா திருப்பலி திருத்தந்தையின் பிரதிநிதி தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. ஏற்கனவே மடு திருத்தலத்திலுள்ள விடுதிகள் எல்லாம் மக்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன.

மேலும் 500இற்கும் மேற்பட்ட தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டு மக்கள் வருகை தந்துள்ளனர். மக்களுக்குத் தேவையான பாதுகாப்பும் கொழும்பிலிருந்து மடு சந்திக்கான விசேட புகையிரத சேவைகளும் - ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மன்னாரிலிருந்து அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன – என்றார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஜே.பெப்பி சோசை அடிகளார், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ், இராணுவ உயரதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஆலயத்தை உடைத்துக் கொள்ளை; பூசகரிடம் பலமணி நேரம் விசாரணை







*நோட்டன் பிரிட்ஜ் நிருபர்*

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா சஞ்சிமலை மேல்பிரிவு தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை உடைத்து கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (9) இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அம்மன் கழுத்திலிருந்த ஒன்றரை பவுன் தங்கத்தினாலான தாலியுடன் கூடிய மாலை மற்றும் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் என்பன களவாடப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

ஆலயத்தின் கதவு நேற்றுக்காலை (10) உடைக்கப்பட்ட நிலையில் இருந்ததைக் கண்ட ஆலய நிர்வாகம் நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்தது.

இதனையடுத்து நோர்வூட் பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற தோட்டப் பகுதிக்குச் சென்று தடயவியல் பொலிஸாரை வரவழைத்து விசாரணைகளை ஆரம்பித்தபோது ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டமை தெரியவந்தது.

அத்துடன் கத்தி ஒன்றையும் தேயிலை மலையில் இருந்து மீட்டுள்ளனர்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்ற தோட்டப் பகுதிக்கு ஹட்டனிலிருந்து பெட்டிமா என்ற பொலிஸ் மோப்பநாய் வரவழைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது குறித்த பொலிஸ் மோப்ப நாய் உண்டியல் இருந்த தேயிலை மலையிலிருந்து நேரடியாக ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சென்று அமர்ந்து கொண்டதையடுத்து சந்தேகத்தின்பேரில் ஆலயத்தின் பூசகரை கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கருவேற்காடு கருமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த திருவிழா

*பதுளை நிருபர்*

ஹல்துமுல்ல கருவேற்காடு ஸ்ரீதேவி கருமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகி 31ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

28ஆம் திகதி புன்னியாக வாசனம், கணபதி ஹோமம், வாஸ்து சாந்தியும் 29ஆம் திகதி கொடியேற்றம், வேட்டைத் திருவிழாவும் 30ஆம் திகதி பால்குட பவனி, திருவூஞ்சல் நடைபெற்று ஸ்ரீதேவி கருமாரியம்மன் சித்திரத்தேரில் எழுந்தருளி ஹல்துமுல்ல ஸ்ரீ ஆதி விநாயகர் ஆலயம், பெரகலை மற்றும் களுபானை சென்று மீண்டும் தேவஸ் தானத்தை வந்தடைவார்.

அத்துடன், 30, 31 ஆகிய திகதிகளில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். 31ஆம் திகதி தீர்த்தோற்வத்துடன் வருடாந்த திருவிழா நிறைவடையும்.

தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ பாலமூர்த்தி சிவாச்சாரியார் தலைமையிலான சிவாச்சாரியார் குழுவினர் மேற்படி வருடாந்த நிகழ்வுகளை நடத்தி வைப்பர்.

மேற்படி திருவிழா நிகழ்வுகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேவஸ்தான அறங்காவலர் சபை யினர் மற்றும் நிர்வாகசபையினர் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## புதையல் தோண்டிய இருவர் கைது

*ராமு தனராஜா*

மொனராகலை, தம்பகல்ல நாகொல்ல பிரதேசத்தில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த இருவர் நேற்று முன்தினம் (09) கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவரும் மொனராகலை பிரதேசத்தைச் சேர்ந்த 20 மற்றும் 54 வயதுடையவர்கள் எனவும் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களுடன் பொலிஸார் இவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேகநபர்கள் மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாகாணத்தில் முதலாம் இடம்

*தலவாக்கலை நிருபர்*

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலய பாடசாலை கரப்பந்தாட்ட அணி மாகாண மட்டத்தில் இடம்பெற்ற 16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மத்திய மாகாணத்தில் முதலாவது இடத்தை சுவீகரித்துள்ளது.

ஹங்குராங்கெத்த கல்வி வலயத்திற்குட்பட்ட நிகலகஸ்கட, பொரமடுல்ல தேசிய கல்லூரி மைதானத்தில் நேற்று முன் தினம் (9) நடைபெற்ற இறுதிப் போட்டியில் அட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட பாரதி தமிழ் வித்தியாலய அணியும் நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலய அணியும் மோதின.

இப்போட்டியில் 5இற்கு 3 என்ற வித்தியாசத்தில் நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலய பாடசாலை அணி சம்பியனானது. இந்த வெற்றியை அடுத்து லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலய பாடசாலை அணி வரலாற்றில் முதல் தடவையாக தேசிய மட்ட கரப்பந்தாட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர் வே.கேதீஸ் ஆசிரியரின் முயற்சியினாலும் வழிகாட்டலினாலுமே இந்த வெற்றியை பெறக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ‘தேயிலைச்சாயம்’ புகைப்படக் கண்காட்சி

*உக்குவளை நிருபர்*

‘தேயிலைச் சாயம்’ எனும் தொனிப்பொருளிலான புகைப்படக் கண்காட்சியொன்று மாத்தளை சர்வதேச காந்தி நினைவு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை (11), நாளை சனிக்கிழமை (12) ஆகிய இரண்டு தினங்கள் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை நடைபெறவுள்ளது.

மாற்றுக் கொள்கைக்கான நிலையம் ஏற்பாடுசெய்துள்ள இந்நிகழ்வில் இந்நிலைய முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சுவையான தேநீர்க் கோப்பையில் மூழ்கிக் கிடக்கும் மலையக சமூகத்தின் வாழ்க்கை வரலாற்றை கடந்த சில வருடங்களாக ‘தேயிலைச் சாயம்’ எனும் பெயரில் புகைப்படக் கண்காட்சிகள் மூலம் நாட்டின் பல இடங்களிலும் நடத்தப்பட்டுவருகிறது. இந்நிலையில், மலையக சமூகம் இலங்கைக்கு வந்து 200ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை நினைவு கூருமுகமாக இக்கண்காட்சி நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board — புதன்கிழமை 2023.08.09 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5201 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,500,400.00
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 9 1 5 7 1 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3443 — சீட்டிழுப்பு திகதி 2023.08.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 71,990,746.40
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 47 50 54 73 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 33432

Lucky 7 — திகதி 09.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0027 — வெற்றி இலக்கினம் கன்னி — L7 இலக்கம் 2 8 — வெற்றி இலக்கங்கள் 9 9 2 1 6 3 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,743,951.84

தன நிதானய — தேதி 2023/08/09 — சீட்டிழுப்பு இலக்கம் 1231 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 104,078,165.60
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 10 43 58 73 — விஷேசட ஆங்கில எழுத்து R — Double Chance இலக்கம் 33334

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-08-09 — சீட்டிழுப்பு இலக்கம் 510 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.4,410,250.20
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 16 17 30 52 — விசேட இலக்கினம் கடகம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1549 — 09/08/2023 — Double Chance 20199 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.403,648,316.00
ஆங்கில எழுத்து B — சுப்பர் இலக்கம் 22 — வெற்றி இலக்கங்கள் 14 16 26 75 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## ஈக்குவடோர் ஜனாதிபதி வேட்பாளர் சுட்டுக்கொலை



ஈக்குவடோர் ஜனாதிபதி வேட்பாளர் பெர்னாண்டோ விலாவிசென்சியோ தேர்தல் பிரசாரத்தின்போது சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஈக்குவடோரில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கான முதற்கட்ட வாக்குப்பதிவு எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் 8 வேட்பாளர்களில் வெற்றி வாய்ப்பு அதிகமுள்ள வேட்பாளராக அந்நாட்டின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகவியலாளருமான பெர்னாண்டோ (வயது 59) நேற்றுமுன்தினம் மாலை கிட்டோ நகரில் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அவர் மக்களிடம் ஆதரவைக் கோரியபடி பிரசாரத்தை முடித்துவிட்டு காரில் ஏற முயன்றபோது அடையாளம் தெரியாத ஒருவர், துப்பாக்கியால் சரமாரியாக சுட்டதில் சம்பவ இடத்திலேயே பெர்னாண்டோ உயிரிழந்தார். இந்தத் துப்பாக்கிச்சூட்டில் பெர்னாண்டோவின் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் காயமடைந்துள்ளனர். இதற்கு அந்நாட்டின் ஜனாதிபதி மற்றும் சக வேட்பாளர்கள் இரங்கலும் கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

## 2023 ஜூலையே அதிக வெப்பமான மாதம்

2023 ஜூலை மாதம்தான் இதுவரை பதிவு செய்யப்படாத மிக அதிக வெப்பமான மாதம் என ஐரோப்பிய விஞ்ஞானிகள் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளனர்.

பூமியின் வெப்பநிலையை மனிதர்கள் கணக்கிட தொடங்கிய நாளிலிருந்து தற்போது வரை பதிவான வெப்பநிலையில் 2023 ஜூலை மாதம் பதிவான வெப்பம்தான் மிகவும் அதிகம். அதாவது 16.95 டிகிரி செல்சியஸ் (62.51 டிகிரி பரன்ஹீட்). இது கடந்த 2019ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பதிவான அதிக வெப்பத்தை விட 0.33 டிகிரி செல்சியஸ் அதிகம் பதிவாகியுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் மிரட்டும் கொரோனா:

## அமெரிக்கா - பிரித்தானியாவில் வேகமாகப் பரவும் புதிய திரிபு

### உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

உலகம் முழுவதும் கொரோனா வைரஸின் தாக்கம் படிப்படியாகக் குறைந்து வந்த சூழலில் தற்போது அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவில் EG.5 என்ற புதிய திரிபு பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரியேசஸ் தெரிவிக்கையில்,

''அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவில் EG.5 என்ற புதிய கொரோனா திரிபு பரவி வருகிறது. இந்த புதிய திரிபு அபாயகரமானதாக திடீரென தொற்றுப் பரவலையும் உயிர்ப்பலிகளையும் அதிகரிக்கக்கூடியதாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயப்படுகிறது.

இந்தச் சூழலில் உலக நாடுகள் கொரோனா வைரஸ் தொற்று எண்ணிக்கை, மரபணு பகுப்பாய்வு விவரங்களை உடனுக்குடன் உலக சுகாதார நிறுவனத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். குறிப்பாக, உயிர்ப்பலி ஏதும் இருந்தால் அதுகுறித்த விவரமும், வைரஸ் தாக்கத்தால் ஏற்படும் உபாதைகள் தொடர்பான விவரங்களையும் அளிக்கவேண்டும். அது மட்டுமல்லாது, தொடர்ந்து தடுப்பூசி திட்டத்தை செயற்படுத்த வேண்டும் - எனத் தெரிவித்துள்ளார்.

## காட்டுத்தீயிலிருந்து தப்பிக்க கடலில் குதித்த 36 பேர் பலி!



அமெரிக்க மாகாணமான ஹவாய் தீவுக்கூட்டத்தில் அமைந்துள்ள மௌயி ((Maui)) தீவில் ஏற்பட்ட பயங்கர காட்டுத்தீ காரணமாக கடலில் குதித்து 36 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹவாயின் மௌயி நகரில காடுகளில் தீ ஏற்பட்டுள்ள நிலையில் அங்கு டோரா ((Dora)) என்ற சூறாவளி கடுமையாக வீசியதால் காட்டுத்தீ வேகமாக நகருக்குள் பரவியது.

இதனால் வீடுகள், வணிக வளாகங்கள் உள்ளிட்டவை பாதிக்கப்பட்டன. 2 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் தீயில் எரிந்து கருகின. இந்தக் காட்டுத்தீயிலிருந்து தப்பிக்க பலர் கடலில் குதித்த நிலையில் மீளமுடியாமல் கடலில் மூழ்கி 36 பேர் உயிரிழந்துள்ளனர்.

தீயைக் கட்டுப்படுத்தும் பணி மற்றும் மீட்புப் பணியிலும் அமெரிக்க கப்பற்படை, விமானப்படை மற்றும் தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை, லஹைனாவில் வசிக்கும் மக்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வீடுகளை விட்டு வெளியேறியுள்ள நிலையில், அவர்களை மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க, கடலோர காவல்படையின் ஹெலிகொப்டர்கள் மற்றும் படகுகள் அனுப்பப்பட்டுள்ளன.

## வேதாரண்யம் கடலில் தத்தளித்த இலங்கை மீனவர்கள் மூவர் கைது



வேதாரண்யம் அருகே எல்லை தாண்டி வந்ததாகக் கூறி இலங்கையைச் சேர்ந்த 3 மீனவர்களை கடலோர காவற்படையினர் கைதுசெய்த நிலையில், அவர்களுக்கு எதிர்வரும் 23ஆம் திகதிவரை நீதிமன்ற காவலில் வைக்க சென்னை எழும்பூர் பெருநகர முதன்மை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த ஆறுகாட்டுத்துறை மீனவ கிராமத்திலிருந்து 2 நாட்டிக்கல் கடல் மைல் தொலைவில், இலங்கையைச் சேர்ந்த பைபர் படகு ஒன்று நிற்பதாக வேதாரண்யம் கடலோர காவல்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், வேதாரண்யம் கடலோர காவல் குழும பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜோதிமுத்துராமலிங்கம், மீன்வளத் துறை ஆய்வாளர் நடேசராஜா மற்றும் பொலிஸார் ஒரு படகில் சென்று, அங்கு நின்றிருந்த இலங்கை பைபர் படகைக் கைப்பற்றி, அதிலிருந்த 3 பேரையும் வேதாரண்யம் கடலோர காவல் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில், அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரீகன் (வயது 45), சிவக்குமார் (வயது 25), ஸ்ரீகாந்தன் (வயது 45) ஆகியோர் என்பதும், கடந்த 6ஆம் திகதி கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற அவர்களின் படகின் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு பழுதடைந்துள்ளது எனவும் இதனால் கடந்த 3 நாட்களாக கடலில் தத்தளித்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவர்களின் பைபர் படகை பொலிஸார் பறிமுதல் செய்தனர். பின்னர், எல்லை தாண்டி வந்ததாக 3 பேரையும் வேதாரண்யம் கடலோர காவல் குழும பொலிஸார் கைதுசெய்து, சென்னை புழல் சிறையிலடைத்தனர்.

## வட்ஸ்அப் வீடியோ அழைப்பில் ஸ்க்ரீன் ஷேர் செய்யும் அம்சம்

மெட்டா நிறுவனம் வட்ஸ்அப் பயனர்களுக்கு புதிய அம்சமொன்றை அறிமுகம் செய்துள்ளது. இதன்மூலம் வீடியோ அழைப்பில் பயனர்கள் தங்கள் ஸ்க்ரீனை ஷேர் செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்ஸ்அப் மற்றும் மெசஞ்சர் டெக்ஸ்ட் மெசேஜ், போட்டோ, வீடியோ, ஓடியோ மற்றும் அழைப்புகளை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தற்போது ஸ்க்ரீன் ஷேர் செய்யும் அம்சத்தை மெட்டா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. வட்ஸ்அப்பின் இந்த நகர்வு கூகுள் மீட், ஸூம் போன்ற வீடியோ கோலிங் செயலிகளுக்கு போட்டியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பயனர்கள் தங்கள் வட்ஸ்அப் செயலியை அப்டேட் செய்த பின்னர் வீடியோ அழைப்பில் பிற பயனர்களுடன் தங்கள் திரையை பகிரும் லோகோ டிஸ்பிளே ஆகும். அதற்கு அனுமதி கொடுப்பதன் மூலம் பயனர்கள் தங்கள் திரையைப் பகிரலாம். இந்த அம்சம் பயனர்களுக்கு பெரிதும் உதவும் என்று தெரிகிறது.

தற்போது வட்ஸ்அப் தளத்தில் ஒரேநேரத்தில் 32 பேர் வரை வீடியோ அழைப்பில் பங்கேற்க முடியும்.

# நவீன தொழில்நுட்பத்துடன் மீன்பிடித்துறையை முன்னேற்ற அமைச்சு நடவடிக்கை

### கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவிப்பு



நவீன தொழில்நுட்பத்துடன் மீன் பிடித் துறையை முன்னேற்றுவதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் (09) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

2048 ஆம் ஆண்டளவில் முன்னேறிய இலங்கையை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அதற்கு பொறுப்புவாய்ந்த அமைச்சு என்றவகையில், கடற்றொழில் அமைச்சுக்கும் அதிகளவான பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த இலக்குகளை அடைவதற்காக கடற்றொழில் அமைச்சு கடந்த வருடத்தில் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

மீனவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவர்களின் நலனுக்காக விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச உறவுகளை வலுப்படுத்துவதில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. மீனவ சமுதாயத்தின் நலனுக்காக மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு காப்புறுதித் திட்டம், ஓய்வூதியம், சேமிப்புத் திட்டங்கள் போன்ற திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது மீன்பிடித் துறை அமைச்சு மக்களுக்கு நெருக்கமான பணிகளை முன்னெடுத்துவரும் அதேநேரம், இதுவரையில் காணப்பட்ட பாரம்பரிய வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் இணை நிறுவனங்களுடன் கைகோர்த்து பெருமளவான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

மீனவக் குடும்பங்களின் மத்தியில் மனதளவில் மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'திரிய தீவர அம்மா' வேலைத் திட்டம் சிறந்ததாகும். மது போதையிலிருந்து விடுபடுவது தொடர்பான பரந்த கலந்துரையாடல் ஒன்றை இதனால் ஏற்படுத்த முடிந்தது.

கடந்த காலங்களின் மீன் விலை அதிகரித்தமையால் நுகர்வோர் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர். மீன் விலை அதிகரிப்புக்கு காலநிலை மாற்றங்களும் காரணமாக அமைந்திருந்தன. அதேபோல் சில வழிபாட்டு நிகழ்வுகள் காரணமாகவும் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடவில்லை. அதனால் போதியளவு மீன்கள் சந்தைக்குக் கிடைக்கவில்லை.

சில அதிகாரிகள் தங்களது பொறுப்புகளை சரியாகச் செய்தாலும், சில அதிகாரிகள் அமைச்சின் வேலைத்திட்டங்கள் பற்றிய தெளிவில்லாமல் செயற்படுகிறார்கள். அது கவலைக்குரிய நிலைமையாகும். 2048இல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டம் சாத்தியமடைய வேண்டுமெனில் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியது அவசியமாகும்.

ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை சாத்தியமாக்குவதற்காக எமது அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்படும். தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள அமைச்சு பெரும் பங்களிப்பை வழங்கி வருவதோடு, எதிர்காலச் சவால்களுக்கு ஈடுகொடுக்ககூடிய வகையிலும் தயார்படுத்தப்பட்டுள்ளது.

பெருமளவான அதிகாரிகள் பொறுப்புடன் பணியாற்றும்போது சிலர் அவர்களை காலை பிடித்திழுக்கும் நிலைமை காணப்படுகிறது. அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்ல தடையாகவிருக்கும் அதிகாரிகள் தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.





**கொழும்பு - 13, கதிரேசன் வீதி, அருள்மிகு ஸ்ரீ காட்டுமாரி அம்மன் ஆலய அலங்கார உற்சவ பெருவிழா திங்கட்கிழமை ஆலய அறங்காவலர் மகேஸ்வரி ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்றது. சிவஸ்ரீ சிவநேசன் சிவாச்சாரியாரின் வழிநடத்தலில் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ செ. சரவணகாந்த் குருக்கள் பூசை வழிபாடுகளை முன்னெடுத்தார். இதன்போது ஆலய நிர்வாகிகள் கௌரவிக்கப்பட்டார்கள். இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர்.** படம்: எம்.நசார்

## ஹம்தி உயிரிழப்பு விவகாரம்: சட்ட நுணுக்கங்களை ஆராய்கிறார் ஹக்கீம்



அறுவை சிகிச்சையின்போது சிறுநீரகங்கள் இரண்டும் அகற்றப்பட்டு உயிரிழந்த மூன்றரை வயது குழந்தை ஹம்தி விவகாரத்திலுள்ள சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து வருவதாகவும், துறைசார் மருத்துவ நிபுணர்களுடன் கலந்துரையாடி வருவதாகவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள உதவுவதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர், தமது இல்லத்தில் வைத்து ஹம்தியின் பெற்றோரான பஸ்லின், பாத்திமா ரிசானா ஆகியோரிடம் சம்பவத்தைக் கேட்டறிந்ததோடு, உரிய மருத்துவ அறிக்கைகளையும் பார்வையிட்டதையடுத்தே அவர் இதனைக் கூறியுள்ளார்.

## சுகாதார சீர்கேடு; யாழில் இரு உணவகங்களுக்கு சீல்

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் பிரதான நகர்ப் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவகங்களுக்கு நீதிமன்ற அனுமதியுடன் சுகாதாரப் பிரிவினரால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பாலமுரளியின் அறிவுறுத்தலின் பிரகாரம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண நகர்ப் பகுதி உணவகங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய யாழ்ப்பாண பஸ் நிலையத்துக்குப் பின்புறம் அமைந்துள்ள உணவகமும் யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் அமைந்துள்ள உணவகமும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நீதிமன்ற உத்தரவின்பேரில் சீல் வைக்கப்பட்டது.

## யாழ். பல்கலைக்கழகத்தில் மூன்று நூல்கள் வெளியீடு



பு.கஜிந்தன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா எழுதிய காலநிலை மாற்றம், அனர்த்த முகாமைத்துவம், HydroClimate of Northern Sri Lanka ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் (09) மாலை 2.00 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், புவியியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வடமாகாணத்தின் பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் ஏ.ஜெகதீசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## காரைநகரில் ஆணொருவர் தூக்கிட்டுத் தற்கொலை

பு.கஜிந்தன்

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் பகுதியில் ஆணொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். இந்தச் சம்பவமானது நேற்றுமுன்தினம் (09) மாலை வேளை இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் தூக்கில் தொங்குவதை அவதானித்த உறவினர்கள், அவரை மீட்டு காரைநகர் வைத்தியசாலைக்கு கொண்டுசென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இராமலிங்கம் வசந்தகுமார் (வயது 42) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இது குறித்த மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருளின் இலக்கு பாடசாலை மாணவர்களே!

## அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி ஹம்சா




ஆலையடிவேம்பு, திருக்கோவில் மேலதிக செய்தியாளர்கள்

போதைப்பொருளின் இலக்கு மாணவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. போதைப்பொருள் மாபியாக்களின் பிடியில் மாணவர்கள் சிக்குண்டு வருவதையும் பல்வேறு சந்தர்ப்பத்தில் நான் அவதானித்துள்ளேன். சில வேளைகளில் பெற்றோர்களே தங்களது பிள்ளையை சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள் என சொல்லுமளவுக்கு மாணவர்களின் நிலை மாற்றமடைந்து வருகின்றது என அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்சா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஸ்ரீஇராமகிருஷ்ண தேசிய பாடசாலைக்கு வியாழக்கிழமை(10) சென்றிருந்த அவர், மாணவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அவர்களது நடை, உடை, பாவனைகளிலும் மாற்றம் இடம்பெறுகின்றது. ஆகவே, நல்ல மாணவர்களாக இருக்கும் நீங்கள் இவ்வாறான தவறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் நல்ல இலட்சியத்துடன் கல்வியை தொடருமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆசிரியர்கள் மேய்ப்பவர்கள். எம்மை வளப்படுத்துகின்றவர்கள். அவர்களை மாணவர்கள் மதிக்க வேண்டும். ஆனாலும் அண்மைக்காலமாக ஆசிரியர்களை தாக்குகின்ற அல்லது மரியாதை செலுத்தாத மிக மோசமான குற்றச் செயல்களை நாம் காணுகின்றோம். இது போன்ற செயற்பாட்டில் ஈடுபடுகின்ற மாணவர்கள் நாளாந்தம் என்முன் நிறுத்தப்படுகின்றனர். அவர்கள் என்முன் குற்றவாளியாக அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக நிறுத்தப்படும்போது நான் மிக கவலையடைகின்றேன்.

மேலும், சிலரை மூடிய அறையில் விசாரணை செய்து சீர்திருத்த பாடசாலைக்கும் அனுப்பும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, மாணவர்கள் எப்போதும் ஆசிரியர்களை மதிக்கின்றவர்களாக இருக்க வேண்டும். ஆசிரியர்களைப் பற்றி விமர்சனங்கள் அவ்வப்போது இருந்தாலும் நான் எப்போதும் எனது ஆசான்களை மதிக்கின்றவன். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என நம்புகின்றவன். அப்படி நான் இருந்ததனால்தான் இன்று உங்கள் முன் நீதிபதியாக இருந்து பேசுகின்றேன் - என்றார்.

வழமையாக தனது பிறந்தநாளில் மரக்கன்றுகளை நட்டுவரும் சிறந்த செயற்பாட்டைக்கொண்ட இவர், தனது பிறந்த தினமான நேற்று(10) பாடசாலைகளுக்கு சென்றிருந்த அவருக்கு அதிபர் ஜே.ஆர்.டேவிட் அமிர்தலிங்கம் தலைமையிலான பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து மகத்தான வரவேற்பளித்தனர். இதன்போது பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

# வலயக்கல்வி பணிப்பாளருக்கு கொலை அச்சுறுத்தல்: எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு





சீனக்குடா செய்தியாளர்

கிண்ணியா வலயக்கல்விப் பணிப்பாளருக்கு ஆசிரியர் ஒருவரால் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வலயக்கல்வி அலுவலக ஊழியர்கள் எதிர்ப்பு போராட்டம் ஒன்றில் வியாழக்கிழமை(10) ஈடுபட்டனர்.

''பெற்றோர்களே சமூக அமைப்புகளே விழித்தெழுங்கள், கல்வி அபிவிருத்தியை தடை செய்யாதே, பிரதேசத்தின் கல்வியை சீரழிக்க தனிநபருக்கு இடமளிக்க முடியாது, தீய சக்திகளின் சூழ்ச்சிக்கு ஆளாக முடியாது, கூட இருந்து குழி பறிப்பவர்களுக்கு இடமளிக்க முடியாது'' போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிண்ணியா பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர், வலயக்கல்விப் பணிப்பாளரை நேரடியாகச் சந்தித்து கொலை அச்சுறுத்தல் விடுத்ததாகவும் மேலும் இந்தக் கொலை அச்சுறுத்தல் குறித்து, குறித்த ஆசிரியர் கிழக்கு மாகாணப் பணிப்பாளருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்திருந்ததாகவும் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.




கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை அதிகாரிகளுக்கான இரண்டு நாள் பயிற்சிச் செயலமர்வு கல்லடியிலுள்ள கூட்டுறவு அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் 08ஆம், 09ஆம் திகதிகளில் இருதினங்களாக இடம்பெற்றன. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்ட பயிற்சிச் செயலமர்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்.சிவலிங்கம், மாவட்டங்களின் கூட்டுறவு அதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட நிகழ்வை ஏற்பாடு செய்த இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சிச் செயலமர்வு வீ எபெக்ற் நிறுவனத்தின் நிதி அனுசரணையோடு இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

**படம்:** மட்டக்களப்பு செய்தியாளர்

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அடையாளம் தெரியாத ஒருவர் சடலமாக மீட்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவு பார் வீதியிலுள்ள மதகு ஒன்றின் கீழிருந்து அடையாளம் காணப்படாத நிலையில் ஆணொருவரின் சடலம் வியாழக்கிழமை (10) காலையில் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பார்வீதி உப்போடை சந்தியை அண்மித்த பகுதியிலுள்ள மதகின் கீழ் சடலமொன்று இருப்பதை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு தெரிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று குறித்த சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக நீதிமன்ற உத்தரவைப் பெறுவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயலமர்வு




கிண்ணியா செய்தியாளர்

திருகோணமலை மாவட்டத்தில் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் எனும் தொனிப்பொருளில் திருகோணமலை ஸ்ரீ மாதுமை அம்பாள் தமிழ் வித்தியாலயத்தில் சிறுவர்கள், இளையோர்களுக்கான சுற்றுச்சூழல் மற்றும் தனிநபர் சுகாதாரம் பற்றிய செயலமர்வு பணிப்பாளர் அருட்பணி கலாநிதி பி.போல் றொபின்சன் தலைமையில் புதன்கிழமை(09) இடம்பெற்றது.

திருகோணமலை எகேட் கரித்தாஸ் நிறுவனத்தினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் கரித்தாஸ் மிசெரியோவின் நிதியுதவியுடன் திருகோணமலை எகெட் கரித்தாஸ் அனுசரணையுடன், இந்நிகழ்வின் வளவாளர்களாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான ச.ஷியாம் சுந்தரம், செ.உதயகுமார் மற்றும் திருமதி அ.நித்தியகலா ஆகியோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், திருகோணமலை எகெட் கரித்தாஸ் உத்தியோகத்தர்களான ஜி.ஏ.பிரான்சிஸ், கே.ரஜித், ஏ.எம்.பிரசாத், ஏ.டி.பொனிபஸ், எம்.டினேஷ், ஆகியவர்களுடன் மாதுமை அம்பாள் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் நா.இளங்கேஸ்வரன், ஆசிரியர்கள்,மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



அட்டாளைச்சேனை பிரதேசத்தில் முன்பள்ளி பாடசாலைகளுக்கான கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகளை அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நகிஜா முசாபீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஜெயந்தி பரமந்தி மற்றும் ஏனைய பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

**படம்:** திராய்க்கேணி செய்தியாளர்




கல்வியமைச்சினால் செறிவூட்டல், கற்றல், கற்பித்தல் மற்றும் மதிப்பீடு, ஆங்கில மொழி திறன்களை மேம்படுத்துதல், அபிவிருத்தித் திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததற்காக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார பீடத்துக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த வரவேற்பு மண்டபத்தில் புதன்கிழமை (09) நடத்தப்பட்ட பரிசளிப்பு நிகழ்வின்போது குறித்த சான்றிதழை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் கலை, கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் உட்பட கல்விசார் உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்டனர்.

**படம்:** மாளிகைக்காடு செய்தியாளர்

# அம்பாறையில் பவுசரில் குடிநீர் விநியோகம்

நிந்தவூர் செய்தியாளர்

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் வகையில் பவுசர்மூலம் நீர் வழங்க அம்பாறை மாவட்ட செயலகத்தினால் 21 இலட்சத்து 88 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.ஸி.எம்.றியாஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்ரமவின் ஆலோசனைக்கமைய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அட்டாளைச்சேனை, மகா ஓயா, லாகுகல, பதியத்தலாவ, திருக்கோவில், ஆலையடிவேம்பு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்களே அதிகம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# இளைஞர் - யுவதிகளுக்கான முதலுதவி பயிற்சிப் பட்டறை




அக்கரைப்பற்று, மாளிகைக்காடு செய்தியாளர்கள்

டைடன் ஏசியன் கெம்பஸ் நிறுவனம் ஏற்பாடு செய்த இளைஞர் - யுவதிகளுக்கான முதலுதவிப் பயிற்சிப் பட்டறை புனித சென்.ஜோன்ஸ் அம்பாறை மாவட்ட காரியாலயத்தில் வியாழக்கிழமை(10) நடைபெற்றது.

இதன்போது டைடன் ஏசியன் கல்வி நிறுவனத்தினுடைய இளைஞர் - யுவதிகளுக்கு விரிவுரைகளும் பயிற்சிகளும் வழங்கப்பட்டதுடன், கலந்து கொண்ட இளைஞர் - யுவதிகளுக்கு முதலுதவி சம்பந்தமான எழுத்துமூல மற்றும் செயன்முறைப் பரீட்சைகளும் படைப்பிரிவினரால் நடத்தப்பட்டன.

இந்நிகழ்வில் டைடன் ஏசியன் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் என்.கோகுலதாஸ், தலைவர் ஏ.ஆர்.எம்.சர்ஜூன், தலைமை நிர்வாக அதிகாரி ஏ.ஏ.ஏ.அப்ரி, அம்பாறை மாவட்ட சென்.ஜோன்ஸ் படைப்பிரிவின் ஆணையர் கெப்டன், எம்.ரி.நௌசாத் வபி, மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளரும் வை.எம்.எம்.ஏ.மாவடிப்பள்ளி கிளையின் தலைவரும் புனித சென்.ஜோன்ஸ் படைப்பிரிவின் கல்முனை கோட்டத்தின் அத்தியட்சகருமான எஸ்.ஏ.முஹம்மட் அஸ்லம், செ‌ன்.ஜோன்ஸ் படைப்பிரிவின் சம்மாந்துறை கோட்ட அத்தியட்சகர் ஹூசைன் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# 'அவனுக்கும் சிறகுகள் உண்டு' சிறந்த சிறுகதை நூலாக தெரிவு





மருதமுனை செய்தியாளர்

2022ஆம் ஆண்டுக்கான கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டியில் சிறந்த சிறுகதைத் தொகுதியாக ஜே.வஹாப்தீனின் 'அவனுக்கும் சிறகுகள் உண்டு' நூல் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கொடகே நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தென்கிழக்கில் கலை, இலக்கிய, ஊடக மற்றும் அறிவிப்பு, கல்வித்துறை என்பவற்றில் மிகவும் ஆழமாகத் தன்னைத் தடம்பதித்து பல்துறை இளம் ஆளுமையாகத் திகழ்பவர் பட்டதாரி ஆசிரியரான ஒலுவில் ஜே.வஹாப்தீன் ஆவார். ஆசிரியராக, அறிவிப்பாளராக, கவிஞராக, நடிகராக, நாவலாசிரியராக, ஊடகத்துறை சார்ந்தவராக தன்னை அடையாளப்படுத்தி வருகின்றார். இவர் எழுதிய நாவல்களுக்கும் கவிதை நூல்களுக்கும் குறுந்திரைப்படங்களுக்கும் மேடை நாடகங்களுக்கும் பல விருதுகளையும் பணப்பரிசுகளையும் பெற்றுள்ளார்.

இவர் கலைப்பிறை என்ற புனைப்பெயரில் எழுதிவருகின்றார். இதுவரை கவிதை, நாவல், ஆய்வு என பல நூல்களை வெளியிட்டுள்ளதுடன் நான்கு குறுந்திரைப்படங்களை இயக்கி - நடித்து வெளியிட்டுள்ளார்.

# ஆயுர்வேத வைத்தியசாலைக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கல்



மீனோடைக்கட்டு செய்தியாளர்

தம்பிலுவில் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலக செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், திருக்கோவில் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரத்தை பிரதேச செயலாளர் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரிடம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளின் இணைப்பாளரும் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல், அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஐ.எல்.அப்துல் ஹை, தம்பிலுவில் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி ஆர்.கோபிநாத் உள்ளிட்ட காணி உத்தியோகத்தர் கலந்துகொண்டனர்.

# மயிலந்தனை படுகொலையின் 31ஆம் ஆண்டு நினைவேந்தல்







வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் மயிலந்தனை கிராமத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 31ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு புதன்கிழமை (09) ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது.

உயிர் நீத்தவர்களின் நினைவாக ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்றதுடன் பொதுச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வை மேற்படி கிராம மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். நினைவேந்தல் உரையை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ குகன் மற்றும் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாட்டாளர் கண்டுமணி லவகுகராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்ப உறவுகளுக்கு நீதி கோரி மகஜர் ஒன்றும் இதன்போது ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கடந்த 1992ஆம் ஆண்டு இதே தினத்தில் புணானை, மயிலந்தனை கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள், பெண்கள் உட்பட 39 பேர் வெட்டியும் சுடப்பட்டும் படுகொலை செய்யப்பட்டனர். 34 பேர் காயங்களுக்குள்ளாக்கப்பட்டனர். இவர்களுக்கான நீதி 31 வருடங்கள் கழிந்தும் இதுவரை கிடைக்கவில்லை.

நேரில் கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் புணானை இராணுவத்தினரே இப்படுகொலையை நிகழ்த்தியதாகத் தெரிவித்து வழக்கு தொடுக்கப்பட்டது. அப்போது இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் 24 இராணுவத்தினர் அடையாளம் காட்டப்பட்டனர். வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட எந்தவொரு இராணுவத்தினரும் குற்றம் இழைக்கவில்லை என ஜூரி குழு ஏகமனதாகத் தீர்ப்பளித்தது.

மேன்முறையீடு செய்வதற்கு அப்போதிருந்த சட்டமா அதிபர் ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே, 2002 நவம்பர் 27இல் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட்டனர். எனவே, குறித்த படுகொலைக்கு நீதியை பெற்றுத்தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர்.

# கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் இருவர் கைது: 23வரை விளக்கமறியல்

அம்பாறை மாவட்ட செய்தியாளர்

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதான இருவருக்கு எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்று புதன்கிழமை(09) உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஆஜர்ப்படுத்தப்பட்ட இரு சந்தேக நபர்களையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் தற்போது விசாரணைகளைப் பொறுப்பேற்றுள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கடந்த 07ஆம் திகதி சாய்ந்தமருது பகுதியில் வைத்து கல்முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் தற்காலிக சிற்றூழியர்களாகக் கடமையாற்றிய இரு சந்தேக நபர்களைக் கைதுசெய்திருந்தனர்.

முஹம்மது நசீப் அஸ்மத் சஹி(வயது25) மற்றும் அப்துல் கரீம் முஹம்மது பர்சான் (வயது26) ஆகிய இருவருமே கடந்த காலங்களில் ஒப்பந்த அடிப்படையில் வீடுகளில் வரி அறவீடு செய்தவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைதானவர்கள் முக்கிய வாக்குமூலங்களை வழங்கியுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் குறித்த வரிமோசடியுடன் தொடர்புடைய பல நபர்கள் கைதுசெய்யப்படவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த ஊழியர்களின் சேவைக்காலத்தில் வரியிருப்பாளர்கள் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளின்போது மோசடி முறைகேடுகள் எவையும் மேலும் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பிலும் இவற்றுடன் வேறு எவராவது சம்பந்தப்பட்டிருக்கின்றனரா என்பது குறித்தும் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது.

மேலும் கடந்த காலங்களில் இவ்வரி மோசடி தொடர்பில் விசாரணைகள் பல தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், பலர் கைதுசெய்யப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர். அத்துடன், இவ்விடயம் பற்றி கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் நிர்வாக மட்டத்தில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன், குறித்த நிதி கையாடல் சம்பவம் தொடர்பில் கடந்த காலங்களில் கல்முனை பொலிஸ் நிலையம், அம்பாறை விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் விசாரணை பொறுப்பளிக்கப்பட்டிருந்த நிலையில், அண்மையில் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் இவ்வழக்கு விசாரணைகள் ஒப்படைக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டு. சிறையில் கைதி ஒருவர் திடீர் மரணம்

மண்டூர் செய்தியாளர்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்ட சிறைக்கைதி ஒருவர் திடீரென மரணமடைந்துள்ள சம்பவம் புதன்கிழமை(09) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏ.வி.வீதி பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மீரா முகைதீன் அப்துல் பரீட் (வயது65) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கே.ஜி எனும் போதைப்பொருளை தன்வசம் வைத்து உட்கொண்டமையினால் பொத்துவில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவருக்கு திடீரென ஏற்பட்ட நெஞ்சு வலியினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவான் பீற்றர்போலின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார்.

அதனையடுத்து, விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெள்ளை வேன் கடத்தல் முயற்சி

## சாய்ந்தமருது - மாளிகைக்காடு மக்களை விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கை

பொலிவேரியன் செய்தியாளர்

சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களைக் கடத்தும் வெள்ளை வேன் கொண்ட குழு ஒன்று உலாவுவதால் பிரதேச மக்களை மிகவும் விழிப்பாக இருக்குமாறு சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூரினால் விடுக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சாய்ந்தமருது – மாளிகைக்காடு பிரதேசத்தின் மாளிகா வீதியில் (சாய்ந்தமருது வைத்தியசாலைக்கு அருகாமையில்) திங்கட்கிழமை (07) பாடசாலை செல்லும் மாணவியொருவரை வெள்ளை வேன் கொண்ட ஒரு குழுவினால் கடத்துவதற்கு மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு நாளும் மதிய நேரமான முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 02 மணிவரை பர்தா உடை அணிந்து யாசகம் கேட்டு வீடுகளுக்குள் நுழைகின்றனர். இதன் மூலமாக கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தில் அதிகம் காணப்படுகின்றன.

எனவே, பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கோ அல்லது வெளி இடங்களுக்கோ அனுப்பும்போது கவனமாக இருந்து மிகவும் பாதுகாப்பாகச் செயற்படுமாறும் தங்களின் சுற்றுப்புறங்களை உன்னிப்பாக அவதானித்து, தங்கள் பிரதேசங்களை அண்மித்த இடங்களில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஏதாவது வாகனங்களோ அல்லது மனிதர்களோ நடமாடினால் அதனை பள்ளிவாசலிலோ அல்லது பொலிஸாரிடமோ அறிவிக்குமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

தங்கள் பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுவதுடன் பகல் வேளைகளில் தங்கள் வீடுகளுக்கு யாசகம் கேட்டு வருவோர் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நாவலடியில் சட்டவிரோதமாக காணி அபகரிப்பு:

## வெளியேற அவகாசம் வழங்கிய பொலிஸார்

கனகராசா சரவணன்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கொழும்பு வீதி நாவலடி தொடக்கம் ஜெயந்தியாலை பிரதேசம் வரையிலான ரயில் தண்டவாளத்துக்கும் கொழும்பு வீதிக்குமிடையிலுள்ள அரச காணிகளில் சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்டுவரும் காணிகளுக்கு புதன்கிழமை (09) சென்ற பொலிஸார் அபகரிப்பில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து வெளியேற இரு நாள் அவகாசம் வழங்கியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் கொழும்பு வீதிக்கும் ரயில் தண்டவாளம் அமைக்கப்பட்டிருக்கும் பகுதிக்குமிடையிலான கொழும்பு வீதியை அண்டிய பகுதியிலுள்ள 28 ஏக்கருக்கு மேற்பட்ட அரச காணிகளை கடந்த சில வாரங்களாக சட்டவிரோதமாக உள்நுழைந்த சிலர் காட்டு மரங்களை வெட்டி கம்பி வேலிகள் அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுவந்தனர்.

இந்நிலையில், அந்தக் காணி அபகரிப்பு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவந்ததுடன் இரா.சாணக்கியன் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டு காணி அபகரிப்பில் ஈடுபட்டவர்களை சட்ட ரீதியாக அரசாங்கத்திடம் இருந்து காணியைப் பெறுமாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்தக் காணி அபகரிப்பு தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையையடுத்து சம்பவதினம் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தலைமையிலான பொலிஸார் சென்று காணி அபகரிப்பில் ஈடுபடுபவர்களிடம், இது அரச காணி எனவும் இந்தக் காணிகளுக்கு அமைக்கப்பட்ட கம்பி வேலிகளை அகற்றி உடனடியாக வெளியேறவேண்டுமெனவும் இல்லாவிடில், சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எனவே, இவைகளை அகற்றிச் செல்வதற்கு இருநாள் அவகாசம் வழங்குவதாகவும் காணி அபகரிப்பில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்துள்ளனர்.

# நிதி நிறுவன முகாமையாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்

மட்டக்களப்பு செய்தியாளர்

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பகுதியில் இயங்கிவரும், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் முகாமையாளர்களுக்கு தற்போதைய காலகட்டத்தில் எதிர்கொண்டுள்ள நிதி பாதுகாப்பு தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸாரால் ஆலோசனை வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(08) மாலை களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட பல நிதி தொடர்பில் மக்களுக்கு சேவையாற்றிவரும் அமைப்புகளின் முகாமையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

குற்றவாளிகள் இலகுவாக கொள்ளையில் ஈடுபடும் இடங்களாக வங்கிகள், நிதிநிறுவனங்கள் மற்றும் நகைக்கடைகள் என்பன காணப்படுகின்றன. அந்தவகையில், குற்றவாளிகள் எவ்வாறு கொள்ளையில் ஈடுபடலாம், நிதி நிறுவனங்களுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் எவ்வாறு உட்புகுவது, எவ்வாறு வெளியேறுவது என்பது தொடர்பில் முன்னரே ஆராய்ந்து கொள்வதோடு, அவர்கள் கொள்ளைகளுக்காக நவீன தொழில்நுட்பங்களையும் பயன்படுத்து கின்றார்கள்.

மேலும் தன்னியக்க நிதிப் பரிமாற்றல்(ஏரிஎம், சிரிஎம்) இயந்திரங்களிலும் முகமூடி, ஜக்கட், தலைக்கவசம் போன்வற்றையும் அணிந்து சென்று கொள்ளையடிக்கின்றார்கள். இவைகள் தொடர்பில் நிதி நிறுவனங்களின் முகாமையாளர்கள், உத்தியோகஸ்தர்கள், பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்ட அனைவரும் மிகவும் விழிப்புடன் செயற்படல் வேண்டும்.

குறிப்பாக, இரவு நேரக் கடமையில் ஈடுபடும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மிகவும் உன்னிப்பாக செயற்படல் வேண்டும். நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு மேலதிக பாதுகாப்புத் தேவை எனக் கருதினால் எதுவித தயக்கமுமின்றி 24 மணி நேரமும் எமது பொலிஸ் நிலையத்தை நாடலாம் என இதன்போது களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் ரி.அபஜவிக்கிரம விளக்கமளித்தார்.

மேலும் நிதிப் பாதுகாப்பு, நிதி கொடுக்கல் வாங்கல்களின்போது எதிர்கொள்ளும் பாதுகாப்புகள், கொள்ளையர்களை இனம்காணுதல், பாதுகாப்பு கெமராவில் பதிவாகும் காட்சிகளைப் பதிவுசெய்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பிலும் இதன்போது முகாமையாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன.

இதன்போது களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.பி.ஜோய், பொலிஸ் உத்தி யோகத்தர் கே.ரமணன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# பீடைமுகாமைத்துவ பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்

மட்டக்களப்பு, திருக்கோவில் மேலதிக செய்தியாளர்

உலகளாவிய ரீதியில் தற்போது பேசுபொருளாகக் காணப்படும் நெற்செய்கையில் ஒருங்கிணைந்த பீடைமுகாமைத்துவ பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வேலைத்திட்டத்தை ஒவ்வொரு விவசாய விஸ்தரிப்பு காரியாலயத்தின் கீழுள்ள விவசாயிகளுக்கும் எதிர்வரும் போகத்திலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களத்தினால் ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, அட்டாளைச்சேனை விவசாய விஸ்தரிப்பு நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் விவசாயத் திணைக்கள போதானாசிரியர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டத்தின் களவிஜய பயிற்சியும் வயல் விழாவும் புதன்கிழமை(09) மேற்கொள்ளப்பட்டது.

விவசாயத் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எவ்.ஏ.சனீரின் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட விவசாய



போதனாசிரியர்களான ஏ.ஜ.ஏ.பெரோஸ் மற்றும் ஏ.ஜெய்லாப்த்தீன் ஆகியோரின் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இடம்பெற்ற களவிஜய பயிற்சியின்போது, அம்பாறை மாவட்ட விவசாயத் திணைக்கள போதனாசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நஞ்சற்ற உணவு உற்பத்தி, சூழலை பாதுகாத்தல், உற்பத்திச் செலவைக் குறைத்தல், விவசாயியின் வருமானத்தை உயர்த்தல், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தல், உயிர் ஆபத்துமிக்க நோயிலிருந்து மக்களைப் பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் இப்பயிற்சி நெறி மூலம் பல்வேறு அனுகூலங்கள் விவசாயிகளுக்கு எதிர்காலத்தில் கிடைக்கும் வாய்ப்பு உருவாகவுள்ளதாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட விவசாய போதனாசிரியர் ஏ.ஜ.ஏ.பெரோஸ் கருத்து தெரிவித்தார்.

# சர்வதேச இளைஞர் தின மாகாண வேலைத்திட்டம் நாளை இடம்பெறும்

இஸ்மாயில்புரம் செய்தியாளர்

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண இளைஞர் - யுவதிகள் பங்குபற்றும் மாகாண வேலைத்திட்டம் நாளை 12ஆம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 150 இளைஞர் - யுவதிகள் பங்குபற்றவிரும்புவதாகவும் அன்றைய தினம் இளைஞர் சமூகத்துக்கு பயனளிக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எம்.பி.சரத் சந்ரபால தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் பிரேரணைக்கிணங்க சர்வதேச இளைஞர் தினம் வருடத்தின் ஒவ்வொரு ஓகஸ்ட் 12ஆம் திகதியும் கொண்டாடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த 2000ஆம் ஆண்டு முதல் சர்வதேச இளைஞர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



***பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தனிப்பட்ட வாத, விவாதங்களை தவிர்த்து நாட்டின் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்று முந்தநாள் ஜனாதிபதி ரணில் பாராளுமன்றத்தில சொல்லியிருக்காரு எலுவா... அவரிட கதய பாத்தா அப்ப எம் பி மார் எல்லாம் பாராளுமன்றத்தில குடும்ப சண்டதான் செய்யிறாங்க எண்டத நல்ல சோக்கா அறிஞ்சி வச்சிருக்காருடாப்பா...! நரி சும்மா கதயாது....***

# அம்பாறையில் எய்ட்ஸ் கமிட்டி கூட்டம்



மாளிகைக்காடு செய்தியாளர்

அம்பாறை மாவட்ட எய்ட்ஸ் கமிட்டிக் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டலில் மற்றும் ஆலோசனைக்கமைவாக கல்முனை பிராந்திய பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.என்.எம்.தில்ஸானின் ஏற்பாட்டில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிநிதிகளும் கல்முனைப் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹீர் உள்ளிட்ட பிரிவுத்தலைவர்களும் பாலியல் நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர் பியூமி பெரேரா, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸாரும் ஏனைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.

குறித்த கூட்டத்தின் இறுதியில் நடைபெற்ற பல்தரப்பு கலந்துரையாடலின்போது பாடசாலை மட்டத்தில் நடைபெறுகின்ற பாலியல் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதுடன் பிராந்தியத்தில் காணப்படுகின்ற பாலியல் தொற்றுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதாகவும் போதுமான சட்ட நடவடிக்கைகளை நாடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

# ஜோன் கீல்ஸ் குழுமத்தின் முயற்சிகளுக்கு அங்கீகாரம்

2023 ஆம் ஆண்டின் சமத்துவம்/ சமவாய்ப்பு மற்றும் பன்முகத்தன்மையை ஊக்குவிக்கும் நிறுவனம் என்ற விருதைப் ஜூன் 17ஆம் திகதியன்று ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனம் பெற்றுள்ளது.

விமன் இன் மெனேஜ்மன்ட் (WIM), சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC) மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் கூட்டுப் பங்காண்மை உடைய விமன் இன் வொர்க் உடன் பணியிடத்திலும் சமூகத்திலும் சாதனை மற்றும் தாக்கத்தை வெளிப்படுத்திய அசாதாரண தலைவர்கள் மற்றும் கூட்டாண்மைகளை ஆண்டுதோறும் அங்கீகரிக்கிறது.

ஜோன் கீல்ஸ் குழுமம் (ஜேகேஎச்) பணிக்குழுவில் உள்ள பன்முகத்தன்மையை மதிப்பிடுவதற்கான அணுகுமுறை மற்றும் ஒவ்வொருவரும் தாங்கள் உண்மையாக சுயமாக இருக்கக்கூடிய மரியாதை மற்றும் நம்பிக்கை அடிப்படையாக இருக்கும் இடமாக இருப்பதற்கான உள்ளடகத்துக்கான தொடர்ச்சியான முயற்சிகள் முற்போக்கானதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குழுமமானது ஒவ்வொரு இனம், வர்க்கம், மதம், பாலின அடையாளம், பாலியல் நோக்குநிலை, வயது மற்றும் திறன் ஆகியவற்றிலிருந்து அதன் மக்களை மதிக்கிறது. மேலும் அதை வலுப்படுத்துவதற்கும் இந்த




மரியாதை மற்றும் நம்பிக்கையைக் கொண்டாடுவதற்கும் தொடர்ந்து பணியாற்றுகிறது. பன்முகத்தன்மைக்கான வணிக விடயத்தைப் பற்றிய தெளிவான கவனம் மற்றும் புரிதலை நிறுவனம் கொண்டுள்ளது. அதில் செழுமையான விவாதம் மற்றும் கலந்துரையாடல் குறிப்பாக முடிவெடுக்கும் நிலைகளில் இது அனுமதிக்கிறது.

குழுமத்தின் தலைவர் கிருஷான் பாலேந்திரா குறிப்பிடுகையில், ஒரு குழுவாக எங்கள் பலமானது எங்கள் மக்கள் என்பதை நாங்கள் அறிவோம். அனைவரையும் உள்ளடக்கிய அமைப்பாக இருப்பதால் நாம் பல்வேறு மனங்களின் தாயகமாக இருக்கிறோம். எங்கள் வணிகத்தின் ஒவ்வொரு அம்சத்துக்கும் ஒவ்வொரு நபரால் கொண்டு வரப்பட்ட பன்முகத்தன்மை புதுமை மற்றும் ஆக்கத்திறன் ஆகியவற்றை மதிக்கிறோம். இது எங்கள் வளர்ச்சியில் எங்களுக்கு தொடர்ந்து உதவுகிறது. உள்ளடக்கிய மற்றும் சமமான கலாசாரத்தை உருவாக்குவதற்கான எங்கள் முயற்சிகள் அங்கீகரிக்கப்பட்டு கொண்டாடப்படுவதை பற்றி நாங்கள் பெருமைப் படுகிறோம். மேலும் இது போன்ற தளங்கள் மேலும் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்துக்கு முன்னுரிமை கொடுக்க நிறுவனங்களை ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம்.

2015 ஆம் ஆண்டில் கொள்கை மற்றும் விழிப்புணர்வு மூலம் ஓரினச்சேர்க்கை மற்றும் பிற பாலின வேறுபாடுகளை கொண்ட (LGBTIQ+) சமூகத்தை உள்ளடக்கிய முதல் இலங்கை நிறுவனமான ஜேகேஎச் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

2020 ஆம் ஆண்டில் குழுவானது அதன் பன்முகத்தன்மை சமபங்கு மற்றும் உள்ளடக்கம் (DE&I) பிராண்டான வன் ஜேகேஎச் ஐ அறிமுகப்படுத்தியது. தொழிலாளர் மற்றும் மதிப்புச் சங்கிலிகளில் பெண்களின் பங்கேற்பை அதிகரிப்பது LGBTIQ + சமூகத்தை உள்ளடக்கியது மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பது ஆகிய 3 தூண்களில் செயல்படுகிறது. (PWD).

2021 ஆம் ஆண்டில் குழு பெண்களின் பங்கேற்பை 40% ஆக (இலக்கை நிர்ணயிக்கும் போது 30% இல் இருந்து) அதிகரிக்க 5 ஆண்டு இலக்கை நிர்ணயித்துள்ளது.இந்த இலக்கை அடைய எண்ணற்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இதில் 100-நாட்கள் சமமான பெற்றோர் விடுப்பு (மகப்பேறு விடுப்பு பற்றிய சாத்தியமான கவலைகள் காரணமாக பெண்களை பணியமர்த்துவதில் தொடர்புடைய பாகுபாட்டை அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு அற்புதமான முயற்சி மற்றும் ஜோன் கீல்ஸுக்கு வெளியே உள்ள பணியாளர்கள் தங்கள் வேலைக்குச் செல்லும் துணைகளை அவர்களின் மகப்பேறு விடுப்புக்குப் பின் அந்தந்த பணியிடங்களுக்கு மீண்டும் பணிக்கு வருவதற்கு உதவுதல்) தொழில் தருநரின் ஆதரவுடனான குழந்தை பராமரிப்பு வசதிகள், பெண்களை மையமாகக் கொண்ட பயிற்சி, பெண் திறமைகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு தருதல், பெண்களை தலைமைத்துவத்தில் அதிகரிப்பதற்கான முயற்சிகள் மற்றும் பாரம்பரியமற்ற பணிகள். மேலும் சமீபத்திய முயற்சிகளில் ஒன்றாக பெண் ஊழியர்களுக்கு இலவச சானிட்டரி நாப்கின்களை வழங்குவது குழு முழுவதும் மாதவிடாய் ஆரோக்கியம், மாதவிடாய் தொடர்பான சமூக களங்கத்தை உடைக்கும் நோக்கிலான விழிப்புணர்வு அமர்வுகளும் அடங்கும்.

குழுமம் தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் அதே வேளையில் அமைப்பு தனது மாற்றுத் திறனாளிகள் குறித்த கொள்கையை ஜனவரி 2023 இல் அறிமுகப்படுத்தியது. ஆதரிக்கப்படும் வேலைவாய்ப்பு அலுவலர்கள் நியமிப்பதை உள்ளடக்கிய ஒரு கட்டம் கட்டப்பட்ட வரைபடம், நியாயமான இடவசதியுடன் பல்வேறு மாற்றுத்திறனாளிகள் பிரிவுகளில் உள்ளவர்களால் நிறைவேற்றப்படக்கூடிய எங்கள் அனைத்து துறைகளிலும் வேலைப் பாத்திரங்களை அடையாளம் காணுதல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு மாற்றங்களைச் செய்து நமது இயல்பியல் மற்றும் டிஜிட்டல் இடங்களை மாற்றுத் திறனாளிகள் அணுகக்கூடியதாக மாற்ற வேண்டும்.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி (ஜேகேஎச்) கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள மிகப் பெரிய கூட்டு நிறுவனமாகும். இது 7 வகையான பரந்துபட்ட தொழில் துறைகளில் 70 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களை இயங்குகிறது. 150 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ள ஜோன் கீல்ஸ் குழுமம் 14,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதோடு எல்.எம்.டி. இதழால் கடந்த 17 ஆண்டுகளாக இலங்கையின் மிகவும் மதிப்புக்குரிய நிறுவனம் என்று தரப்படுத்தப்பட்டுள்ளது. ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்காவின் நிறுவன அறிக்கையிடல் மதிப்பீட்டில் வெளிப்படைத்தன்மையில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தைப் பெற்றுள்ளது. உலக பொருளாதார மன்றத்தின் முழு அங்கத்தவராக இருக்கும் அதே வேளை ஐ.நா. குளோபல் கொம்பக்டின் அங்கத்துவத்தையும் கொண்ட ஜே.கே.எச். ஜோன் கீல்ஸ் பௌண்டேஷன் ஊடாக அதன் கூட்டாண்மை சமூக பொறுப்பாக எதிர்காலத்துக்கான நாட்டை கட்டியெழுப்புதல் என்பதை நோக்கி பயணிக்கின்றதுடன் இலங்கையில் பிளாஸ்ரிக் மாசினை குறைக்க ஒரு வினையூக்கியாக பிளாஸ்ரிக்சைக்கிள் ஊடாக செயற்படுகின்றது.

# சர்வதேச இரத்தினக்கல் ஆபரணக் கண்காட்சி

ஆசியாவின் முதன்மையான இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சி தொடர்ச்சியாக 30ஆவது வருடமாக மீண்டும் இடம்பெறவுள்ளது. 2024 FACETS Sri Lanka கண்காட்சியானது இலங்கையின் அதிசயங்களை உலகுக்குக் காட்சிப்படுத்துவதன் மூலம் நாட்டின் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கலாசாரத்தின் வரலாற்றை வெளிப்படுத்துகின்றது. உலகின் மிகச்சிறந்த இரத்தினக் கற்களை கொண்டுள்ளதன் மூலம் இலங்கை ஒரு இரத்தினக் களஞ்சியமாக உலகம் முழுவதும் அறியப்படுகின்றது. மிகப்பெரிய இரத்தினக்கல் மையங்களில் ஒன்றாக கருதப்படும் இலங்கையின் தனித்துவமான மற்றும் அழகிய இரத்தினக்கற்கள் உலகெங்கிலும் கேள்வியாக உள்ளன. இக்கண்காட்சியில் இலங்கை தனது அற்புதமான இரத்தினக்கற்களை காட்சிப் படுத்துவதற்கு மேலதிகமாக உள்ளூர் கலாசார அம்சங்களுடன் உலகளாவிய போக்குகளை இணைக்கும் வகையிலான சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஆபரண வடிவமைப்புகளையும் உற்பத்தி செய்து காண்பிக்கிறது.

கண்காட்சியின் 30ஆவது பதிப்பான இந்நிகழ்வானது இத்தொழிற்றுறையை பாதிக்கும் பல்வேறு குறிப்பிடும்படியான விடயங்களில் கவனம் செலுத்தும் என்பதோடு நிலைபேறானது முதல் நியாயமான வர்த்தகத்தை ஊக்குவித்தல் மற்றும் இத்தொழிற்றுறையை மேலும் வளர்ப்பதற்காக இத்தொழிற்றுறை கடைப்பிடிக்க வேண்டிய சூழல் தொடர்பான விழிப்புணர்வு நடைமுறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தும். FACETS கண்காட்சியின் இந்தப் பதிப்பானது இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலில் இலங்கை எவ்வாறு நிலைபேறான தன்மையை ஒருங்கிணைத்துள்ளது என்பதை எடுத்துச் சொல்கின்ற பிரத்தியேகமான நிலைபேறான தன்மையைக் கொண்டிருக்கும். இலங்கையின் முழு பெறுமதிச் சங்கிலியின் நிலைபேறான தன்மையானது. தன்னுடையது எனும் நிலையிலிருந்து சந்தைக்கு என்பதையும் இந்த உலகளாவிய கண்காட்சியானது இது போன்ற வளம் மிக்க ஒரு நாடு மிகவும் நிலைபேறான தளத்துக்கு மாறுவது முக்கியமானது என்பதையும் இலங்கை




இம்முறை FACETS கண்காட்சியானது இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் மூலவேர்களை எடுத்துக் காண்பிப்பதோடு அரசர்கள் கால சகாப்தத்துக்குப் பயணித்து பல ஆண்டுகளாக நாட்டின் இரத்தினங்கள் மற்றும் ஆபரணத் தொழில் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது. FACETS 2024 கண்காட்சியானது வடிவமைப்பு மற்றும் கைவினைப்பொருளின் உணர்ச்சிகரமான அம்சத்தை மையமாகக் கொண்டு இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களின் உலகத்தை காட்சிப்படுத்துவதோடு அவை ஆண்டாண்டு காலமாக எவ்வாறு வளர்ச்சியுற்றது என்பதையும் எடுத்துக் கூறுகின்றது. அது மாத்திரமன்றி இது இத்தொழிற்றுறையின் எதிர்காலத்துக்கு அவசியமான விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதோடு தற்கால போக்குடைய நகை வடிவமைப்புகள் மற்றும் எதிர்காலத்தில் உலகளாவிய பார்வையாளர்களை அது எவ்வாறு கவரும் என்பதையும் ஆராய்கிறது. FACETS இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிற்சங்கம் இணைந்து அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது.

FACETS 2024 கண்காட்சியானது 2024 ஜனவரி 06 முதல் 08 வரை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடை பெறவுள்ளது. சர்வதேச இரத்தினக் கல் மற்றும் ஆபரணக் கண்காட்சியானது உலகளாவிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறை உயர் மட்ட வர்த்தக கொள்வனவாளர்கள், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண மொத்த விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், பட்டைதீட்டுவோர், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் உலகம் முழுவதும் உள்ள ஆர்வமுள்ளவர்கள் உள்ளிட்ட அனைவரையும் ஒன்றிணைக்கவுள்ளது.

FACETS Sri Lanka - 2024 ஜனவரி 06 - 08

கொழும்பு சினமன் கிராண்ட்

இப்போதே பதிவு செய்யுங்கள்: buyers@facetssrilanka.com

# இ/ஹிக்கஸ்வத்த ஆரம்பப் பாடசாலைக்கு குடிநீர் அமைப்பு தொகுதியை நன்கொடையாக வழங்கிய அலியான்ஸ் லங்கா நிறுவனம்

மூனிச் மாநகரைத் தளமாகக் கொண்ட உலகளாவிய காப்புறுதி வலுமையமான Allianz SE இன் உறுப்பு நிறுவனமான அலியான்ஸ் லங்கா இலங்கையில் நிலைபேண்தகு அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் சுத்தமான குடிநீருக்கான இயந்திரம் ஆகியவற்றுடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த முயற்சி பூர்த்தி செய்யப்பட்டு 2023 மே 10 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக பாடசாலையிடம் ஒப்படைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கு இதனை குடிநீருக்கான மார்க்கத்தை வழங்குவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இதனால் அவர்கள் செழித்து அவர்களின் கல்விப் பயணங்களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்த நாம் வழிகோலுகிறோம்” என்று குறிப்பிட்டார்.



வசதியை உறுதி செய்வதற்கும் மற்றொரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. சப்ரகமுவ மாகாணத்தில் குருவிட்ட ,இரத்தினபுரி, ஹிக்கஸ்வத்த ஆரம்பப் பாடசாலையில் அதிநவீன குடிநீர் சுத்தப்படுத்தல் தொகுதியை நிறுவி, நன்கொடையாக வழங்குவதன் மூலம் இது நிறைவேற்றப்பட்டுள்ளது. அனைவருக்கும் சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் என்ற ஐ.நா. நிலைபேற்றியல் அபிவிருத்தி இலக்கு எண் 06 ஐ நிறைவேற்றுவதற்கான அலியான்ஸ் லங்காவின் உறுதிப்பாட்டுக்கு இணங்க இந்த முயற்சி அமைந்துள்ளது.

1,000 க்கும் மேற்பட்ட கிராமப்புற மாணவர்களைக் கொண்ட இரத்தினபுரி, ஹிக்கஸ்வத்த ஆரம்பப் பாடசாலை சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் தொடர்பாக கடுமையான சவால்களை எதிர்கொண்டது. ஆரோக்கியமான கற்றல் சூழலுக்கு சுத்தமான குடிநீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த அலியான்ஸ் லங்கா புதிய செயல்பாட்டு, உயர்தர குடிநீர் தொகுதியின் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பாடசாலை அதிகாரிகளுடன் ஒத்துழைத்து செயற்பட்டுள்ளது. முழுமையான தொகுதியில் 150 அடி ஆழமுள்ள குழாய்க் கிணறு மற்றும் நீர் சுத்திகரிப்பு தொகுதி ஆகியவை அடங்கும். இது ஒரு நவீன குழாய் தொகுதி மற்றும் மின்சாரத்தால் இயங்கும் நீரிறைக்கும்

கையளித்து வைக்கும் நிகழ்வானது அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் இலங்கைக்கான முகாமையாளருமான அலன் ஸ்மி, பிரதம விநியோக அதிகாரி ரங்க டயஸ் மற்றும் அலியான்ஸ் லங்காவின் பிராந்திய விற்பனை மற்றும் முகாமைத்துவ அணிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். கையளிப்பு வைபவத்தில் அலியான்ஸ் லங்காவின் அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட அன்பான வரவேற்பும் நன்றி வெளிப்படுத்தலும் இந்த முயற்சியானது உண்மையில் இத்தகைய உதவி தேவைப்பட்ட பாடசாலை மாணவர்களின் அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் ஆழமான தாக்கத்தை பிரதிபலிக்கிறது.

அலன் ஸ்மி இந்த திட்டத்துக்கான தனது உற்சாக மேலீட்டையும் ஆதரவையும் வெளிப்படுத்தி கருத்து வெளியிடுகையில்,“சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வது ஒரு அடிப்படை உரிமை மற்றும் ஆரோக்கியமான சமூகத்துக்கான இன்றியமையாத அங்கம் என்று நாங்கள் நம்புகிறோம். இரத்தினபுரி/ஹிக்கஸ்வத்த ஆரம்பப் பாடசாலையில் இந்த சுத்தமான குடிநீர் தொகுதியை நிறுவுவதன் மூலம் மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிலைபேற்றியல் மிக்க வழியில்

அலியான்ஸ் லங்காவின் இந்த சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் சார்ந்த முயற்சியானது சமூகப் பொறுப்புணர்வு மற்றும் உதவி தேவைப்படும் சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்கான அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும். 2023 ஆம் ஆண்டில் இன்னும் அதிக எண்ணிக்கையில் சுத்தமான குடிநீர் தொகுதி செயற்றிட்டங்களை மேற்கொள்ள நிறுவனம் திட்டமிட்டுள்ளதுடன் குருவிட்டயில் அதன் முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அலியான்ஸ் லங்கா என்ற நாமத்துடன் பொதுவாக அறியப்படுகின்ற அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் மற்றும் அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் ஆகியன ஜேர்மனியின் மூனிச் மாநகரில் தலைமையகத்தைக் கொண்ட காப்புறுதி மற்றும் சொத்து முகாமைத்துவ வணிகங்களில் முதன்மையான சேவைகளைக் கொண்ட உலகளாவிய நிதிச் சேவை வழங்குநரான Allianz SE இன் முழுமையான உரிமையாண்மையைக் கொண்ட துணை நிறுவனங்களாகும். அலியான்ஸ் குழுமத்தின் உலகளாவிய பலம் மற்றும் உறுதியான மூலதனமாக்கல் உள்ளூர் நிபுணத்துவம் மற்றும் வணிக அறிவு ஆகியவற்றுடன் இணைந்து அலியான்ஸ் லங்காவின் வெற்றிக்கான சக்திவாய்ந்த சூத்திரமாக உள்ளன.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilaneditor@gmail.com

# பிரிட்டிஷ் C s k sm nl l tm snm பாடநெறியை அறிமுகப்படுத்தும்

இலங்கையின் முன்னணி நாடுகடந்த உயர்கல்வி வழங்குநரான Universal College Lanka (UCL) ஆனது புகழ்பெற்ற மத்திய லங்காஷயர் (Central Lancashire) பல்கலைக்கழகத்துடன் இணைந்து இலங்கையில் ஒரேயொரு பிரித்தானிய MSc டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தொடர் பாடல் (Digital Marketing Communications) பாடநெறியை அறிமுகப்படுத்தியுள்ளது. டிஜிட்டல் யுகத்தின் முன்னேற்றம் மற்றும் அதன் முன்னோக்கிய பாதையை அடிப்படையாகக் கொண்ட இந்த பாடநெறியானது ஐக்கிய இராச்சியத்தின் (UK) Institute of Direct and Digital Marketing (IDM) மூலம் அங்கீகாரம் பெற்ற மதிப்புமிக்க முதுகலை பட்டத்துக்கு மேலும் மதிப்புச் சேர்த்து உள்ளூர் தொழில் வல்லுநர்களை உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மை கொண்டவர்களாக மாற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.



*(இடமிருந்து வலமாக) சந்தைப்படுத்தல் மற்றும் மாணவர் சேர்க்கை தலைவர் திருமதி கல்ஹாரி மீகொட, பிரதம செயற்பாட்டு அதிகாரி திருமதி எரந்தி தொடம்வல, பிரதம நிறைவேற்று அதிகாரி கிஹான் சில்வா, பணிப்பாளர் கலாநிதி ஹர்ஷ அலெஸ், பணிப்பாளர் ஸ்டீவன் எண்டர்பி, கல்வி விவகாரங்களுக்கான பீடாதிபதி கலாநிதி தனஞ்சய் குல்கர்னி, School of Business தலைவர் கலாநிதி தேவங்கி பெரேரா*

UCL இன் பிரதம நிறைவேற்று அதிகாரி கிஹான் சில்வா இப்பாடநெறியின் அறிமுகம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் ஒரே யொரு பிரித்தானிய MSc டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் பாட நெறியை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச் சியடைகிறோம். இலங்கையில் முதன்மை யான நாடுகடந்த உயர்கல்வி வழங்குநர் எனும் வகையில் தொழில்துறை முழுவதி லும் உள்ள வணிகங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் வெற்றியை உருவாக்குவதில் டிஜிட்டல் சந்தைப்படுத் தல் வகிக்கும் முக்கிய பங்கை UCL புரிந்துகொண்டுள்ளது. தமது இலக்குக்கு அமைவான பயனர்களுடன் உரிய திறனுடன் தொடர்புறுவதற்கும் வர்த்தக நாமங்களை உருவாக்குவதற்கும் வணிக வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் டிஜிட் டல் தளங்களின் சக்தியைப் பயன்படுத் தக்கூடிய தொழில் வல்லுநர்களுக்கான வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் எமது பாடநெறியான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தொடர்பாடலில் MSc வடிவமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

UCL இன் பணிப்பாளர் கலாநிதி ஹர்ஷ அலெஸ் கருத்துத் தெரிவிக்கையில்,"UCL ஆனது மத்திய லங்காஷயர் பல்கலைக்கழகத்துடன் ஒரு வலுவான மற்றும் தொழில்முறை ரீதியான பங்காளித் துவத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இலங்கையில் உலகத்தரம் வாய்ந்த பிரிட்டிஷ் கல்வியை வழங்குவதில் அது பெருமை கொள்கிறது. கடந்த 7 வருடங்களாக நாடு கடந்த ரீதியில் உயர்கல்வியை வழங்குவதில் UCL முன்னணியில் உள்ளது. இந்த அனுபவம் ஒரு பெரிய படியாக முன்னேறி ஒரு ஒப்பிட முடியாத முதுகலை பட்டப்படிப்பை அறிமுகப்படுத்த எமக்கு உத்வேகத்தை அளித்துள்ளது. உலகத் தரம் வாய்ந்த உயர்கல்வியை வழங்குவதிலான எமது வெற்றிகரமான சாதனையை உரிய வகையில் பயன்படுத்தி மனம் கவரும் வகையில் தாம் தெரிவு செய்த துறைகளில் சிறந்து விளங்குவதற்கான திறன்களையும் அறிவையும் வழங்குவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த திட்டம் வல்லுநர்களை டிஜிட்டல் சந்தைப்படுத்தல் துறையில் சிறந்து விளங்குவதற்காக மேலும் மேம்படுத்தும் என நான் நம்புகிறேன்" என்றார்.

UCL இல் முதுகலை பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுவது குறித்து தனது கருத்துகளைப் பகிர்ந்த UCL இன் பணிப்பாளர் Steven Enderby, "முதுகலை கல்வியானது தங்களது கல்வித் தகைமைகளை மேம்படுத்தவும் தொழில் முன்னேற்றம் அடையவும் விரும்பும் ஆர்வமுள்ள நிபுணர்களின் எதிர்காலத்தை கட்டமைப்பதற்கான கருவியாக உள்ளது. அது விஞ்ஞானமாகவோ வணிகமாகவோ அல்லது ஏனைய துறைகளில் எதுவாக இருந்தாலுமோ எமது குறிக்கோள் ஒப்பற்ற திறமைகளை வளர்த்து அந்தந்த தொழிற்றுறைகளுக்கு குறிப்பிடும்படியான பங்களிப்பை வழங்கும் பட்டதாரிகளை உருவாக்குவதாகும். அந்த வகையில் இந்த மைல்கல்லானது தகுதி, திறமை, இலட்சியம் உள்ளவர்களுக்கு அவர்களுக் கான உள்நாட்டு மற்றும் உலகளாவிய வாய்ப்புகளை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் சேர்க்கும் என நாம் நம்புகிறோம். எனவே, தகுதிவாய்ந்த நிபுணர்களை அவர்களின் தொழிற்றுறை வாய்ப்புகளை உயர்த்துவதற்கான அடுத்த கட்டத்தை மேற்கொள்வதற்காக அழைப்பு விடுப்ப தில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். UCL ஆனது தொழிற்றுறையில் சிறந்து விளங்குபவர்களை பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துபவர்களாக ஆக்குவதன் மூலம் நாட்டுக்குள்ளும் உலகளாவிய ரீதியிலும் அவர்களுக்கான வளமான எதிர்காலத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்க உறுதிபூண்டுள்ளது" என்றார்.

UCL இல் MSc டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் பாடநெறியை தொடர்வதற் கான சிறந்த 10 காரணங்களையும் அதன் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களுடன் இலங்கையில் உள்ள விவேகமான மாணவர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த பிரிட்டிஷ் கல்வியை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பு தொடர்பிலும் UCL இன் கல்வி விவகாரங்களுக்கான பீடாதிபதி கலாநிதி தனஞ்சய் குல்கர்னி விளக்கமளித்தார். இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "Central Lancashire பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் MSc டிஜிட்டல் சந்தைப் படுத்தல் தொடர்பாடல் பாடநெறியானது பிரயோக ரீதியான உயர் விளக்கம் கொண்ட கல்வித் திட்டத்துக்கான பாலத்தை ஏற்படுத்துவதற்கான எமது உறுதிப் பாட்டை உள்ளடக்கியுள்ளதோடு இது மாணவர்களுக்கு போட்டித்தன்மையை ஏற்படுத்துகிறது. இப்பாடநெறியின் நோக் கம் மற்றும் அந்நோக்கத்துக்கு பெறுமதி சேர்க்கும் வகையில் பல்வேறு தொழில் துறைகளில் இருந்து மாணவர்களை இதில் ஈர்ப்பதற்கு நாம் விரும்புகிறோம்" என்றார்.

பிரிட்டிஷ் MSc டிஜிட்டல் சந்தைப்படுத் தல் தொடர்பாடல் பாடநெறியானது டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தகவல்தொடர் பாடல் தொடர்பான முழு அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு பாடத்திட்டத்தை வழங்குகிறது. இங்கு மூலோபாய டிஜிட் டல் சந்தைப்படுத்தல் விடயம் முதல் நுகர்வோர் நடத்தை, நுகர்வோர் உளவியல் நவீன சந்தைப்படுத்தல் மற்றும் நடைமுறை ரீதியான அனுபவம் வரை மாணவர்கள் விரிவான நிபுணத்துவத்தைப் பெறுகிறார்கள். இந்த பாடநெறியானது மிக இறுக்கமான ஆராய்ச்சி திட்டத்துடன் நிறைவடைவதோடு இது மாற்றமுறும் விடயங்கள் பற்றிய முழுமையான புரிதலை ஏற்படுத்துகிறது.

பிரிட்டிஷ் MSc டிஜிட்டல் சந்தைப்படுத் தல் தொடர்பாடல் பாடநெறியானது டிஜிட்டல் சந்தைப்படுத்தலில் தங்கள் நிபுணத்துவத்தை உயர்த்துவதில் ஆர்வ முள்ள தனிநபர்களுக்காக வடிவமைக்கப் பட்டுள்ளதோடு பல்தரப்பட்ட தேவை கொண்டவர்களுக்காக வழங்கப்படுகிறது. UCL முன்னாள் மாணவர்கள் இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள் குறைந்தபட்சம் இரண்டாம் வகுப்பு கீழ்நிலைப் பிரிவு பட்டங்களைக் கொண்டவர்கள் மற்றும் CIM, SLIM, CIMA, ACCA போன்ற UK பட்டங்களுக்குச் சமமான தகுதிகளைக் கொண்டுள்ள நிபுணர்களை இது வரவேற்கிறது. மேலும், இதனுடன் தொடர் புடைய பணி அனுபவம் உள்ள விண்ணப் பதாரர்களுக்கு முதுநிலை கற்கைகளில் தேர்ச்சி பெறுவதற்காக தங்கள் திறனை வெளிப்படுத்த விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். (நிபந்தனைகளுக்குட்பட்டது)

இத்திட்டத்தில் பங்கேற்பவர்கள் சர்வ தேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மதிப்புமிக்க தகுதியைப் பெறுகின்றனர். அத்தோடு உலகளாவிய தொழில் வாய்ப்புகளுக்கான கதவுகளை இது திறக்கிறது. MSc ஆனது இலங்கை யில் ஒரேயொரு பிரிட்டிஷ் MSc டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் பாடநெறியாக தனது பிரத்தியேக அந்தஸ்து மூலம் தனித்துவம் கொண்டுள்ள தோடு டிஜிட்டல் சந்தைப்படுத்தல் கல்வியில் தனது நிலையை உறுதிப்படுத் துகிறது.

**UCL பற்றி:**

இலங்கையின் முதன்மையான நாடு கடந்த உயர்கல்வி வழங்குநரான Universal College Lanka (UCL) ஆனது மாணவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையை பின்பற்றுவதுடன் பிரபலமான அவுஸ்திரேலியாவின் Monash, கனடாவின் Dalhousie, பிரிட்டனின் Central Lancashire பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மிகவும் இறுக்கமான சர்வதேச தரங்களையும் உயர் தரத்தையும் பேணியவாறு ஒப்பற்ற அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது. அதிக மாணவர் தொடர்பு மற்றும் அவர்களுடனான சிறந்த ஈடுபாட்டை ஏற்படுத்தும் வகையிலான சர்வதேச அளவில் பரிந்துரைக்கப்பட்ட வகுப்பறை அளவுகள் நவீன ஆய்வகங்கள்,சிறந்த நூலகம், வசதியான படிக்கும் பகுதிகள், மாணவர் ஓய்வு மற்றும் பொழுதுபோக்குக்காக தனித்துவமான திறந்த மொட்டைமாடி பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய அதிநவீன வசதிகளுடன் உயர் தகுதி வாய்ந்த மற்றும் திறமையான விரிவுரையாளர்களை UCL கொண்டுள்ளது. UCL ஆனது மாணவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கும் கல்வியகத் தில் மாணவர் அனுபவத்தை மேம்படுத்து வதற்கும் உதவும் உட்புற வெளிப்புற நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகள் ஆகிய இரண்டையும் ஒழுங்கமைத்து நடத்துகிறது.

UCL இல் பிரிட்டிஷ் MSc டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் பாடநெறியில் எவ்வாறு சேர்வது என்பது பற்றிய மேலதிக தகவலுக்கு 077 411 00 00 அல்லது info@ucl.lk ஊடாக தொடர்பு கொள்ளுங்கள். அல்லது 503 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள UCL வளாகத்துக்கு விஜயம் செய்யுங்கள்.

# ஆடைத்தொழிலின் நிலையான இருப்பு;புதிய சந்தைகளுக்கு பிரவேசிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் அவசியம்

## ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் வலியுறுத்தல்

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இந்நாட்டின் ஆடை ஏற்றுமதியில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாலும் தற்போதைய சூழ்நிலையை சமாளித்து புதிய உத்திகள் மூலம் தீர்வுகளை வழங்க வேண்டும் என ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF) தெரிவித்துள்ளது. குறிப்பாக ஆடை Orders கள் குறைந்து வருவதால் சில பெரிய ஆடை ஏற்றுமதி நிறுவனங்கள் தங்கள் சேவைத் திறனை அதிகரிக்கவும் செலவுகளைக் கட்டுப்படுத்தவும் தங்கள் தொழிற்சாலைகளின் திறனைக் கட்டுப்படுத்துதல், அந்த நிறுவனங்களுக்கு சொந்தமான வேறு தொழிற்சாலைகளுக்கு ஊழியர்களை இடம் மாற்றுவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF) கூறுகிறது. இந்த நாட்டில் ஆடைத் துறையின் சவாலான மற்றும் கட்டுப்படுத்த முடியாத காரணிகளின் அடிப்படையில், துறையின் முன்னேற்றத்துக்காக நிலையான நிர்வாக முடிவுகள் எட்டப்பட்டன. எந்தவொரு பெரிய நிறுவனமும் இலங்கையை விட்டு வெளியேறவோ அல்லது அந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பணிப் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் வலியுறுத்தியுள்ளது. மேலும் இந்தியா,சீனா,ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற புதிய சந்தைகளில் நுழைய நாம் உடனடியாக சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று மன்றம் வலியுறுத்தியுள்ளது.



தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை உற்பத்தியாளர்கள் சில சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் பிரதித் தலைவர் ஃபீலிக்ஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,"சர்வதேச Orderகளின் குறைவினால் ஆடைகளுக் கான தேவை சுமார் 25%ஆல் குறைந்துள்ளது. மேலும் இந்த நிலைமையை மேம்படுத்த அனைத்து சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்களும் தங்களால் இயன்றவரை முயற்சித்துள்ளன. மூடப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் வேலை இழப்புகள் பற்றிய சரியான தரவு எங்களிடம் இல்லை.ஆனால் அனைவரையும் பாதித்துள்ள இந்த நிலைமையை மீண்டும் சரியான பாதையில் கொண்டு வர அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் நாங்கள் ஏற்கனவே எடுத் துள்ளோம் என்று சொல்லலாம். சில நிறுவனங்கள் தற்காலி கமாக மூடப்பட்டிருப்பது உண்மைதான். மேலும், சில நிறுவனங்கள் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட் கள் வேலை செய்து மாதச் சம்பளம் கொடுக்கின்றன. தொழிலாளர் ஆணை யாளரின் ஒப்புதலைப் ஃ அங்கீகாரத்தைப் பெற்ற பிறகு சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் ஊழியர்களுக்கு தற்காலிகமாக கோவிட் காலத்திலும் நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்ட காலத்திலும் சம்பளத்தில் 50% வழங்கப்பட்டது" என தெரிவித்தார்.

ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் உப தலைவர் ஃபீலிக்ஸ் பெர்னாண்டோ மேலும் தெரிவிக்கையில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் பாதிப்பில் இருந்து முற்றாக விடுபடவோ அல்லது அதனைக் கட்டுப்படுத்தவோ சம்பிரதாயபூர்வமான நடவடிக்கை திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். 2023 இல் முடிவடைய இருக்கும் + முன்னுரிமை வரிச் சலுகையை மேலும் நீடிப்பு,இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் வழங்கப்படும் ஆடை ஒதுக்கீட்டை கணிசமான மதிப்பில் அதிகரிப்பது மற்றும் சீனா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற புதிய சந்தைகளுக்குள் நுழைவதற்கு வசதியாக அந்த நாடுகளுடன் தாமதிக்காமல் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார். மேலும் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து சக்தி உற்பத்திச் செய்வதன் மூலம் செலவைக் குறைத்தல், சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் அடிப்படையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைத்தல்,அரசாங்க செலவினங்களைக் குறைத்தல் மற்றும் நேரடி வரி வருமானத்தை அதிகரித்தல், இலங்கையின் மீட்சி போன்ற முன்மொழிவுகளை துரிதப்படுத்துதல், பொருளாதாரம், வங்கி வட்டி வீதம் மற்றும் பணவீக்கத்தை மீண்டும் குறைந்த நிலைக்கு கொண்டு வருவது போன்ற மேக்ரோ பொருளாதார ஸ்திரப்படுத்தல் திட்டங்களின் மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று அவர் கூறினார்.

JOINT APPAREL ASSOCIATION FORUM
SRI LANKA APPAREL

ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் நிலவும் பணவீக்கம் , பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு இந்நாட்டில் உள்ள ஆடை உற்பத்தியாளர்களுக்கு அந்நாடுகளில் வணிகர்கள் வழங்கும் Orders களின் தொகை 15% - 20% வீதத்தினால் குறைந்துள்ளதாகவும் இந்நிலைமை நாட்டின் ஏற்றுமதியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் தெரிவித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு இலங்கையில் ஆடைத் தொழிற்றுறைக்கு பொற்காலமாக அமைந்ததுடன் 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட முடிந்தது. தற்போதைய நெருக்கடிக்கு முகங்கொடுத்து. இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் இவ்வருடம் சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரால் குறையக்கூடும் என ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் உப தலைவர் ஃபீலிக்ஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இந்த நிலை 2023 இறுதிக்குள் சாதகமான நிலையை எட்டும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

## கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் நிறைவடைந்தவுடன்

# பிராந்திய விரிவான பொருளாதார கூட்டிணைவில் அங்கத்துவம் கிடைக்கும்

ஜனாதிபதி ரணில் நம்பிக்கை








கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் பிராந்திய பரந்த பொருளாதார கூட்டிணைவில் (RCEP) அங்கத்துவம் பெற்று, ஏனைய ஆசியான் நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தோனேசிய தூதரகத்தில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற 56ஆவது “ஆசியான்” தின கொண்டாட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆசியானின் 56ஆவது ஆண்டு விழாவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். இந்த அமைப்பு மெதுவாக ஆனால் சீராக வளர்ந்து, பரந்த எதிர்காலத்துடன் உலகின் மிகப்பாரிய பொருளாதார கூட்டிணைவுகளில் ஒன்றாக முன்னேறி வருகிறது. ஆசியாவில் உங்கள் செயற்பாடுகள் எளிதானது அல்ல என்றாலும், உங்களால் அதை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடிந்துள்ளது.

ஆசியான் அமைப்பின் ஆரம்ப காலத்திலேயே அதில் இணைந்துகொள்ளுமாறு இலங்கைக்கு அழைப்புக் கிடைத்தது. நாம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு நானும் சாட்சியாளன் ஆவேன் என்பதோடு, எனது தந்தையார் அந்த பணிகளில் பங்கெடுத்தவர் ஆவார்.

1965ஆம் ஆண்டளவில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்த பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கை தொடர்பான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. முதற்கட்டமாக அப்போதைய பிரதமரான டட்லி சேனாநாயக்கவினால் பசுமைப் புரட்சி என்ற பெயரில் அமைப்பொன்று நிறுவப்பட்டிருந்தது. அதனூடாக செனோய் அறிக்கை வெளியிடப்பட்டது. அப்போதைய பல்கலைக்கழக கல்லூரியின் பொருளாதாரம் தொடர்பான விரிவுரையாளராக பணியாற்றிய பேராசிரியர் செனோய் இலங்கைக்கு வருகை தந்து மேற்படி அறிக்கையை சமர்ப்பித்திருந்தார்.

எனது தந்தையார் பல்கலைக்கழக கல்லூரியில் கற்ற காலத்தில் பேராசிரியர் செனோய் அங்கு விரிவுரையாளராகப் பணியாற்றினார். அப்போதைய அமைச்சரான ஜே.ஆர்.ஜயவர்தனவின் அழைப்பின் பேரிலேயே பேராசிரியர் செனோய் இலங்கைக்கு வருகைதந்தார். பேராசிரியர் செனோயின் அறிக்கையினால், இலங்கையின் பொருளாதாரத்தில் தாராளத் தன்மை மற்றும் சமூக நலன் மீது அரசாங்கம் கொண்டுள்ள பொறுப்புகளை உறுதிப்படுத்த முடிந்தது.

இரண்டாவதாகவே இலங்கைக்கு ஆசியான் அமைப்பில் இணைந்துகொள்ள வேண்டும் என்ற அழைப்புக் கிடைத்தது. 2ஆம் உலகப் போர்க்காலத்தில் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டிணைவொன்றை ஏற்படுத்தியிருந்த காரணத்தினால் அவ்வாறானதொரு அழைப்பு விடுக்கப்படுவது பொதுவான விடயமாகும்.

அக்காலத்தில் தென்கிழக்காசிய கட்டமைப்பொன்று இருக்கவில்லை. இருப்பினும் அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. அதனால் எமக்கு மேலதிக நேரமும் இருந்தது. அமைச்சராகவிருந்த ஜே.ஆர். ஜயவர்தனவின், அமைச்சரவை உறுப்பினர்கள் சிலர், அமைச்சரவைக்கு வெளியில் பாராளுமன்றத்திலிருந்த எனது தந்தையார் உள்ளிட்ட சிலருக்கும் செனோய் அறிக்கையை நடைமுறைப்படுத்தும் அதேநேரம் ஆசியான் அமைப்பில் இணைந்துகொள்ளுமாறும் அழுத்தம் கொடுக்கப்பட்டது.

இருப்பினும், துரதிர்ஷ்டவசமாக அப்போதைய வெளிவிவகார அமைச்சராக செயற்பட்ட டட்லி சேனாநாயக்கவுக்கு அமைச்சின் திறைசேரியின் அதிகாரிகள் பொருளாதாரத்தை திறக்கும் முயற்சிகள் பாதமாக முடியும் என்று எச்சரிக்கை விடுத்திருந்ததோடு, அணிசேரா நாடுகள் அமைப்பின் அனுமதி கிடைக்காத காரணத்தினால் ஆசியான் அமைப்பில் இணைய வேண்டாம் என வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் கூறியிருந்தனர்.

எவ்வாறாயினும் 56 வருடங்களுக்கு பின்னர் நாம் ஆசியான் அமைப்பில் இருக்கின்றோம். ஆசியான் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் பலவும் தற்போது மேம்பாட்டை அடைந்துள்ளன. நாம் 1970களில் சமூக, பொருளாதார முறைமைக்கு மாறினோம். எமது மூலதன வழிமுறைகளை மிதித்து தள்ளிவிட்டே முன்னேறிச் சென்றோம். அந்த பொருளாதார கெடுபிடிகளிலிருந்து இன்னும் மீளவில்லை.

தற்காலத்தில் உங்களுடைய அமைப்பானது உலகின் வளர்ச்சியடையக்கூடிய பொருளாதார பலத்தைக் கொண்டிருக்கிறது. 55 வருடங்களின் பின்னர் நாம் வங்குரோத்து நிலையில் இருக்கிறோம். இதுவே நாம் வருந்துவதற்கான காரணமாகும்.

எவ்வாறாயினும், வங்குரோத்து நிலையை தற்போது முழுமையாக எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம். தற்போது நாம் துரிதகதியில் முன்னேற்றத்தை நோக்கி நகரப்போகிறோம். அதன்போது ஆசியான் அமைப்பின் பயணத்தை முன்னுதாரணமாகக் கொள்வோம். ஆசியான் அமைப்புடன் மிக நெருக்கமாக செயற்படவும் எதிர்பார்த்துள்ளோம்.

அதுவே எனது அரசாங்கத்தின் கொள்கையாகும். ஏனைய அரசாங்கங்களின் கொள்கையும் அதுவாகவே இருக்கும் என நம்புகிறேன். தென்கிழக்காசியாவுடன் எமக்குள்ள தொடர்புகள் மிகவும் வலுவானது. இந்தியா மற்றும் மாலைத்தீவு தவிர்ந்த தென்கிழக்காசியாவுடன் மிகவும் நெருக்கமான நாடாக இலங்கையே உள்ளது.

மகாவிகாரை பௌத்தமத கற்பித்தல் செயற்பாடுகளுடன் லாவோஸ், கம்போடியா மற்றும் வியட்நாம் உள்ளிட்ட பகுதிகளுடன் நாம் கொண்டுள்ள நெருங்கிய தொடர்புகளையும் நாடுகளுக்கிடையிலான நீண்டகாலமாக நடந்துள்ள செயற்பாடுகள் தொடர்பில் பாருங்கள். மலாய் இனத்தவர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அநுராதபுரம் ராஜதானியில் ஸ்ரீவிஜய அரசனின் ஆட்சிக்காலத்தில் காணப்பட்ட தொடர்புகள் முக்கியமான மைற்கல்லாகும்.

எமது நாடுகள் மத்தியில் கடந்த காலங்களில் காணப்பட்ட தொடர்புகள் மேற்படி விடயங்களின் ஊடாக வெளிப்படுகின்றன. நாம் எமது கலாசார, பொருளாதார, அரசியல் தொடர்புகளை மேலும் பலப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. அதனாலேயே பிரதமராக பதவி வகித்த காலத்தில் மிகவும் அவசியமாகக் காணப்பட்ட சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டேன். அதனை நாம் மீண்டும் புதுப்பிக்க வேண்டியுள்ளது.

அதேபோல் தாய்லாந்து உள்ளிட்ட ஏனைய ஆசியான் அமைப்பு நாடுகளுடனும் அதனை விரிவுபடுத்த நாம் பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம். அதேபோல் பிராந்திய பரந்த பொருளாதார கூட்டிணைவு (RCEP) அமைப்பிலும் இணைந்துகொள்ள இலங்கை தீர்மானித்துள்ளது. அதில் சீனா, ஜப்பான், தென்கொரியா மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. உலகின் பலமான நாடுகள் தொகுதியொன்றும் அங்கத்துவமும் வகிக்கிறது. பிராந்தியத்தில் வேறு எந்தவொரு நாடும் இதற்காக விண்ணப்பிக்கவில்லை. இருப்பினும் இலங்கை அந்த அமைப்புடன் இணைந்துகொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் நிறைவுற்ற பின்னர் RCEP அமைப்பில் இணைந்துகொள்ள எதிர்பார்த்திருப்பதோடு, ஆசியான் அமைப்பின் ஏனைய நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவது தொடர்பில் பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதுவே ஆசியான் அமைப்புக்குள் நாம் நுழைவதற்கான சிறந்த வழிமுறையாக காணப்படுகிறது. ஆசியான் அமைப்பின் அழைப்பை நாம் புறக்கணித்ததால் அதனில் இணைந்துகொள்ள முடியாமல் போனது. தற்போது பிராந்திய பரந்த பொருளாதார கூட்டிணைவுடன் (RCEP) இணைந்துகொள்ள வேண்டிய தேவை எமக்குள்ளது. அதனை புறக்கணிப்பதற்கான அவசியங்கள் எவையும் இல்லை.

நாம் கிழக்குடன் இணைந்து பொருளாதாரத்தை நோக்க வேண்டும். கிழக்கு தான் அபிவிருத்தி அடைந்து வருகிறது. பிராந்திய பரந்த பொருளாதார கூட்டிணைவுடன் (RCEP) ஒப்பந்தத்தை ஏற்படுத்த பேச்சுவார்த்தை நடத்தும் அதேநேரம், இந்தியா மற்றும் பங்களாதேஷ் உடன் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்த பேச்சுவார்த்தை நடத்தவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். வங்காள விரிகுடாவைச் சுற்றியுள்ள பிராந்தியத்திலிருந்து, கிழக்கில் ஜப்பான் வரையான அனைத்து நாடுகளுடனும் மேலும் நெருக்கமான உறவுகளை உருவாக்க இது உதவுகிறது.

நாம் பின்பற்றும் பொருளாதார மற்றும் அரசியல் மூலோபாயம் இதுவாகும். மேலும் அரசியல் ரீதியாக நெருக்கமான உறவுகளை வைத்திருப்பது மிகவும் அவசியம்.

அமைச்சுகள் மட்டத்தில் இந்தத் தொடர்பாடல் இணைப்புகளைப் பேணுவதை உறுதிப்படுத்துமாறு எமது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு அறிவுறுத்தினேன்.

மேலும், இந்த சூழ்நிலைகள் குறித்து எப்போதும் அவதானம் செலுத்தி, அடிக்கடி சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தி, பிரச்சினைகள் இருந்தால் அவற்றைத் தீர்த்து, முன்னோக்கிச் செல்லத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் நான் அவர்களுக்கு அறிவுறுத்தினேன்.

எம்மால் மீண்டும் திரும்பிச் செல்ல முடியாது. நாம் முன்னோக்கியே செல்ல வேண்டும். தற்போதைய சர்வதேச நிலைமை குறித்தும் நாம் அவதானம் செலுத்தி வருகிறோம். இந்து-பசுபிக் பிராந்தியத்தில் ஆசியான் அமைப்பின் எதிர்கால கண்ணோட்டத்துடன் நாம் உடன்படுகிறோம். அந்த நோக்கை முன்னெடுத்துச் செல்வதற்கும் அதற்கேற்ப முன்னோக்கிச் செல்வதற்கும் நாங்கள் முழு ஆதரவை வழங்குகிறோம்.

இதேவேளை காலநிலை நிகழ்ச்சி நிரல் தொடர்பில் நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம். மேலும், நீலப் பொருளாதாரத்தின் ஆற்றலை உணர்ந்து, ஆசியான் அமைப்பின் பிற நாடுகளும் இலங்கையும் காலநிலை நிகழ்ச்சி நிரலில் இணைந்து செயல்பட முடியும். எனவே நாம் இணைந்து செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் அதிகம் உள்ளன. அதில் ஒரு பகுதியை இங்கு குறிப்பிட்டுள்ளேன். எனவே, நாம் ஆசியான் அமைப்போடு கைகோர்த்து செயல்பட வேண்டியுள்ளது என்றார் .

# ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு வெற்றி கிட்டும்

## கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஜெயராஜ் விஷ்ணுராஜ்



இந்நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் பல காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தற்காலத்தில் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் வெற்றியடையும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளதாக முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வடகொழும்பு செயலாளருமான ஜெயராஜ் விஷ்ணுராஜ் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்நாட்டின் இனப்பிரச்சினையை அடுத்த தலைமுறையினர் மீது சாட்டக்கூடாது என்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும்.

அந்த வகையில், இனப் பிரச்சினைக்கான தீர்வை வழங்க வேண்டும் என்ற நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிகளுடன் சாதகமான பேச்சுகளை நடத்தியுள்ளதாகத் தெரிகிறது.

அதேபோல், ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டிலும் ஜனாதிபதியின் யோசனைக்கு பெருமளவில் எதிர்ப்புகள் காட்டப்படவில்லை. மாறாக, 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான சாத்தியங்களையே காண்பிக்கிறது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதானது தமிழ் மக்களுக்கான முழுமையான தீர்வாக அமையாது என்றபோதிலும் தீர்வுக்கான முயற்சிகளின் ஆரம்பக்கட்டமாக அந்த திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான முனைப்புகள் அமையக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாகன விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

மாதம்பை - குளியாப்பிட்டி பிரதான வீதி கனதுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்த ஆசிரியர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக குளியாப்பிட்டி தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளும் லொறியும் மோதியே குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தும்மல சூரிய, சார்தமன் சந்தி பொதுவடவனவைச் சேர்ந்த என். டபிள்யூ. வைத்தியரத்ன (36 வயது) என்ற ஆசிரியரே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மேற்படி ஆசிரியர் குளியாப்பிட்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக குளியாப்பிட்டி தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் லொறி சாரதியை கைது செய்த பொலிஸார் லொறியையும் கைப்பற்றியுள்ளனர்.

லொறி சாரதி 36 வயதுடைய கல்பிட்டி, நுரைச்சோலை பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

# இஸ்திஸ்கா தொழுகையை நிறைவேற்றி பிரார்த்தனைகளில் ஈடுபடுங்கள்

## அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கோரிக்கை

நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் நிலவி வரும் அதிகரித்த வெப்பநிலை மற்றும் வறட்சி காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நேரத்தில் நாம் அல்லாஹ்வின் அருள் வேண்டி பிரார்த்திப்பது அவசியமாகும்.

தண்ணீர் நமக்கு அத்தியாவசியமான ஒன்றாகும். அது இல்லாமல் போவதால் அல்லது அதன் போதாமை காரணமாக பயிர்ச்செய்கைகள் இறந்து, கால்நடைகள் உட்பட ஏனைய உயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன. நீர்மின் உற்பத்தி கேள்விக்குறியாகி உள்ளது. விவசாய நடவடிக்கைகள் போதுமான நீர் இன்றி தடைப்பட்டிருக்கின்றன.

இதுபோன்ற அசாதாரண நிலைமைகளில் அன்றாட வாழ்வின் நடைமுறைகளை மீள்பரிசீலனை செய்து திருத்திக் கொள்வதும் அதிகமாக இஸ்திஃபார் செய்வதும் நபிவழியாகும். அதன்மூலம் எமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு அல்லாஹ்வின் அருள் இறங்கலாம்.

எனவே, எமது பாவங்களுக்காக நாம் தௌபா செய்வதுடன் நாடளாவிய ரீதியில் வறட்சி நீங்கி, மழை பொழிய சகல முஸ்லிம்களும் பிரார்த்தனையில் ஈடுபடுமாறும் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் பொறுப்பாக உள்ளவர்கள் மழை தேடித் தொழும் தொழுகையை நடத்துதல் மற்றும் மழை வேண்டி ஓதும் துஆக்களை ஓதுதல் போன்றவற்றுக்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக் கொள்கிறது.

# உலக சாரணர் ஜம்போரி தளத்திலிருந்து இலங்கை சாரணர்கள் வேறிடத்துக்கு மாற்றம்

கொரியாவின் கரையைக் கடக்கவுள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ள கானுன் சூறாவளியைக் கருத்தில்கொண்டு, 25ஆவது உலக சாரணர் ஜம்போரியில் பங்கேற்கும் இலங்கை சாரணர் குழுவினர் சேமன்ஜியம் ஜம்போரி தளத்தில் இருந்து பாதுகாப்பாக இடமாற்றப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் கொரியாவின் சியோனனில் உள்ள டாங்கூக் பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில் புதிய தங்குமிடத்துக்கு பாதுகாப்பாக சென்றடைந்த இலங்கை சாரணர்கள், சிறந்த ஆரோக்கியத்துடன் உள்ளனர். சில செயற்பாடுகள் மற்றும் திட்டங்களை அவர்கள் தமது புதிய இடத்திலிருந்து தொடரவுள்ளனர்.

ஜம்போரியில் பங்கேற்கும் அனைத்து இலங்கை சாரணர்களினதும் தொடர்ச்சியான பாதுகாப்பையும் நலனையும் உறுதி செய்வதற்காக, கொரியாவுக்கான இலங்கைத் தூதரகம், இலங்கை சாரணர் குழுவின் நிர்வாகத்துடனும் சம்பந்தப்பட்ட தென் கொரிய அதிகாரிகளுடனும் தொடர்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் இரண்டு மாதங்களில் 33 சிறுவர்கள் போதைக்கு அடிமை

## அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணத்தில் கடந்த 02 மாத காலப்பகுதிக்குள் 33 சிறுவர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்தின் போதே அதிகாரிகளால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் போதைக்கு அடிமையாகி வரும் நிலைமை அதிகரித்து வருகிறது. கடந்த 02 மாத காலப்பகுதிக்குள்ளேயே 33 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 11 பேர் ஹெரோயின் போதைப்பொருளுக்கும் 08 பேர் ஐஸ் போதைப்பொருளுக்கும் 07 பேர் கஞ்சா போதைப்பொருளுக்கும் ஏனையவர்கள் போதை மாத்திரைகளுக்கும் அடிமையாகி உள்ளனர்.

அதேவேளை, புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கும் அதிகளவான சிறுவர்கள் அடிமையாகியுள்ளனர் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (10.08.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 203.5320 | 215.2867 |
| கனேடியன் டொலர் | 232.2698 | 244.9357 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.7098 | 45.8578 |
| யூரோ | 343.0285 | 360.2568 |
| ஜப்பான் யென் | 2.1686 | 2.2816 |
| சிங்கப்பூர் டொலர் | 231.2647 | 243.9672 |
| ஸ்ரேலிங் பவுண் | 397.3759 | 416.6926 |
| சுவிஸ் பிராங்க் | 354.6520 | 375.3765 |
| ஐ.அ. டொலர் | 313.6129 | 326.7861 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 849.5162 |
| குவைட் | குவைட் தினார் | 1,040.8499 |
| ஓமான் | ஓமான் றியால் | 831.8526 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.9229 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.3558 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.1952 |

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



பெண்கள் பெட்மிண்டன் போட்டியில் கிழக்கு மாகாண மட்டத்தில் மட்/பட் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தின் 18 வயதுப் பிரிவினர் மூன்றாம் இடத்தைப் பெற்று தேசியத்துக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியானது திருகோணமலை உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது. மேலும் இம் மாணவர்கள் கடந்த வருடம் மாகாண மட்டத்தில் பெட்மிண்டன் மற்றும் கூடைப்பந்தாட்டத்தில் முதல் இடத்தை சுவீகரித்தமை சிறப்பம்சம்.

**படம்:** குருக்கள்மடம் நிருபர்

## தனுஷ்கவின் கட்டுப்பாடுகள் தளர்வு: ஆனால் ஒரு தொலைபேசியை பயன்படுத்தவே அனுமதி



அவுஸ்திரேலியாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி. ரி20 உலகக்கிண்ணத் தொடரில் பாலியல் குற்றச்சாட்டுக்குள்ளான இலங்கை அணி வீரர் தனுஷ்க அவுஸ்திரேலியாவுக்குள் நடமாடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீதிமன்றம் தளர்த்தியுள்ளது.

இந்த மாதம் அவுஸ்திரேலியாவுக்குள் இரண்டு தடவைகள் சுதந்திரமாக நடமாடுவதற்கு ஏற்ற விதத்தில் பிணையில் தளர்வை மேற்கொள்ளுமாறு தனுஷ்க நீதிமன்றை கோரியிருந்தார். இந்தக் கோரிக்கையை செவிமடுத்த நீதிபதி, இந்தக் கிழமை நான்கு நாட்களும் மாத இறுதியில் நான்கு நாட்களும் தனுஷ்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் பகுதிக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

எனினும், அங்கு செல்வதற்கு 48 மணித்தியாலத்துக்கு முன்னர் தனுஷ்க பொலிஸாருக்கு அறிவிக்கவேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார். எனினும், தனுஷ்க வாரத்தில் மூன்று நாட்கள் பொலிஸ் நிலையத்துக்கு செல்லவேண்டும் என உத்தரவிட்டுள்ள நீதிபதி, தனுஷ்க ஒரு கையடக்கத் தொலைபேசியை மாத்திரம் பயன்படுத்தலாம். டேட்டிங் அப்களை பயன்படுத்த முடியாது எனவும் உத்தரவிட்டுள்ளார்.

## டயலொக் பாடசாலை றக்பி லீக் - 2023: அடுத்த சுற்றுப்போட்டிகள் இன்று ஆரம்பம்

கடந்த ஜூன் மாதம் முதல் நடைபெற்றுவரும் டயலொக் பாடசாலை றக்பி லீக் - 2023 தொடரின் அடுத்த சுற்றுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை எஸ்.பி.சி. மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் புனித பீட்டர்ஸ் கல்லூரியை எதிர்த்து புனித அந்தோனியார் கல்லூரி களமிறங்குகிறது.

நடப்பு சீசனில் ஒரு போட்டியிலும் தோற்கடிக்கப்படாத அணிகளாக காணப்படும் புனித பீட்டர்ஸ் கல்லூரி, புனித அந்தோனியார் கல்லூரிகளுக்கிடையிலான மோதல் பரபரப்பாக இருக்கும்.

நாளை சனிக்கிழமை கொழும்பு ரோயல் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் இஸிப்பத்தான கல்லூரியை ரோயல் கல்லூரி எதிர்த்தாடுகிறது. இந்த ஆட்டத்தில் இஸிப்பத்தான கல்லூரி வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Dialog
SCHOOLS
RUGBY

## உலகக்கிண்ணத் தொடரின் ஒன்பது போட்டிகளின் அட்டவணையில் மாற்றம்

ICC MEN'S CRICKET WORLD CUP INDIA 2023

ஒக்டோபர் மாதம் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணை அண்மையில் வெளியிடப்பட்டிருந்த நிலையில் 9 லீக் போட்டிக்கான திகதியை மாற்றி புதிய அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 15ஆம் திகதி நடைபெறவிருந்த இந்தியா - பாகிஸ்தான் போட்டி ஒக்டோபர் 14ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனால், டில்லியில் ஒக்டோபர் 14ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் - இங்கிலாந்து போட்டி ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஹைதராபாத்தில் இலங்கை - பாகிஸ்தான் மோதும் போட்டி ஒக்டோபர் 12ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. லக்னோவில் நடைபெறும் தென் ஆபிரிக்கா - அவுஸ்திரேலியா போட்டி ஒக்டோபர் 13ஆம் திகதிக்கு பதில் 12ஆம் திகதியே நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேபோல் சென்னையில் ஒக்டோபர் 14ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட பங்களாதேஷ் - நியூசிலாந்து போட்டி ஒக்டோபர் 13ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்தப் போட்டி பகலிரவு போட்டியாக நடைபெறும். லீக் சுற்றின் கடைசியில் நவம்பர் 12ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த இரண்டு போட்டிகள் நவம்பர் 11ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளன.

அதன்படி காலை 10.30 மணிக்கு அவுஸ்திரேலியா - பங்களாதேஷ் அணி புனேவில் மோதுகிறது. பிற்பகல் 2.00 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் விளையாடுகின்றன. நெதர்லாந்துக்கு எதிரான இந்தியாவின் கடைசி லீக் போட்டி 11ஆம் திகதியிலிருந்து 12ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இப்போட்டி பெங்களூரில் பகலிரவு போட்டியாக நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தேசிய மட்ட கரப்பந்தாட்டப் போட்டிக்குத் தெரிவான லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம்

வி.பிரசாந்தன்

நுவரெலியா கல்வி வலயத்திலுள்ள சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலய பாடசாலை மாணவர்கள் வரலாற்றில் முதல் தடவையாக தேசிய மட்ட கரப்பந்தாட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

நேற்று முன்தினம் மாகாண மட்டத்தில் இடம்பெற்ற 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி பல்வேறு அணிகளுடன் வெற்றிபெற்று மத்திய மாகாணத்தில் முதலாவது இடத்தைப் பெற்று பாடசாலை வரலாற்றில் முதலாவது முறையாக தேசிய மட்ட கரப்பந்தாட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

குறிப்பாக விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான வே.கேதீஸ் ஆசிரியரின் அதிக முயற்சியின் காரணமாகவே மாணவர்களால் இவ்வெற்றியை பெறக்கூடியதாக இருந்தது.

## இளையோர் பொதுநலவாய விளையாட்டு விழா: இலங்கைக்கு இரு பதக்கங்கள்



மேற்கிந்தியத் தீவுகளின் போர்ட் ஒவ் ஸ்பெயினில் நடைபெற்று வரும் ட்ரின்பாகோ 2023 இளையோர் பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் களமிறங்கிய அயோமால் அகலங்க வெள்ளிப் பதக்கத்தையும், ஆண்களுக்கான உயரம் பாய்தலில் நிலுபுல பெஹசர வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர்.

அயோமல் அகலங்க போட்டியை நிறைவுசெய்ய அவர் 51.61 செக்கன்களை எடுத்துக்கொண்டார். குறித்த போட்டி நிகழ்ச்சியில் அவரது 2ஆவது அதிசிறந்த நேர பெறுதியாகவும் பதிவாகியது. ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் பங்குகொண்ட திக்வெல்ல விஜித மத்திய கல்லூரியைச் சேர்ந்த நிலுபுல் பெஹசர 2.00 மீற்றர் உயரத்தை தாவி வெண்கலப் பதக்கம் வென்றார். இம்முறை பொதுநலவாய இளையோர் விளையாட்டு விழா மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சிக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 5 வீரர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## விளையாட்டுத் துளிகள்

இந்தியாவின் சென்னையில் நடைபெற்றுவரும் ஆசிய சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பரபரப்பான ஆட்டத்தில் பாகிஸ்தானை 4-0 என்ற கோல் கணக்கில் இந்திய அணி அபாரமாக வீழ்த்தியது. இறுதி லீக் ஆட்டத்தில் ஜப்பான் 2-1 அடிப்படையில் சீனாவை வீழ்த்தி அரையிறுதி சுற்றுக்குத் தகுதிபெற்றது. இந்தியா, மலேசியா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதிபெற்றன. பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய அணிகள் அரையிறுதி வாய்ப்பை இழந்தன.

பிரின்ஸ் சுல்தான் மைதானத்தில் நடந்த அரபு கிளப் அரையிறுதிப் போட்டியில் அல்-நஸர் மற்றும் அல்-ஷார்ட்டா அணிகள் மோதின. இதில் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் அல்-நஸர் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடருக்கான ரிக்கெட் வாங்க விரும்புபவர்கள் தங்களது பெயர்களை www.cricketworldcup.com என்ற இணையத்தளத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகள் ரிக்கெட்டுகள் செப்டெம்பர் 15ஆம் திகதி விற்பனையாகும். ஒன்லைன் ரிக்கெட் விற்பனை எதிர்வரும் 25ஆம் திகதி தொடங்கும்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த வாரம் இலங்கை மண்ணில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 3 ஒருநாள் போட்டிகளிலும், அதைத் தொடர்ந்து ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியிலும் பங்கேற்கிறது. இவ்விரு தொடருக்கான பாகிஸ்தான் அணியை புதிய தெரிவுக் குழுத் தலைவர் இன்ஸமாம் உல்-ஹக் தெரிவுசெய்து நேற்று அறிவித்தார். பாபர் அசாம் தலைமையிலான அந்த அணியில் ஷான் மசூத் நீக்கப்பட்டுள்ளார். பகீம் அஷ்ரப் இரு ஆண்டுகளுக்குப் பிறகு ஒருநாள் போட்டி அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

## இன்றைய போட்டிகள்

LPL T20 LANKA PREMIER LEAGUE 2023

தம்புள்ள எதிர் காலி (இரவு - 7.30)

## பெஸ்ட் இலவன் வெற்றிக் கிண்ணம்: சம்பியனானது சாய்ந்தமருது விளாஸ்டர்



மாளிகைக்காடு நிருபர்

கல்முனை பெஸ்ட் இலவன் விளையாட்டுக் கழகம் ஏற்பாடுசெய்த பெஸ்ட் இலவன் ரி-10 வெற்றிக்கிண்ணத்துக்கான போட்டியில் இந்த வருடத்தில் தொடர்ந்து 10 கிண்ணங்களை சுவீகரித்து அசைக்க முடியாத சக்தியாக மிளிர்ந்த சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தை சாதாரணமாக வீழ்த்தி, சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று பெஸ்ட் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களைப் பெற்ற சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் மற்றும் சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகள் இறுதிப் போட்டியிக்குத் தகுதிபெற்றது. கல்முனை சந்தாங்கேணி பொது மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் எம்.என்.எம். ஜலூத் தலைமையிலான சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

இதில் வெற்றிபெற்ற அணிக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும், வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டதுடன், இறுதிநாள் போட்டியின் ஆட்டநாயகனாக சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக் கழக அதிரடி துடுப்பாட்ட வீரர் முஹம்மட் ஆபாக் தெரிவுசெய்யப்பட்டார்.

## ஆசிய சாதனையை நிலைநாட்டிய வீராங்கனைக்குப் பாராட்டு

கண்டி நிருபர்



பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஆசிய மற்றும் தேசிய சாதனையை நிலைநாட்டிய வீராங்கனை தருஷி கருணாரத்னவுக்கு பாராட்டுத் தெரிவிக்கும் வைபவம் அண்மையில் கண்டி ஜோர்ஜ் ஈ.டி.சில்வா பூங்காவில் இடம்பெற்றது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பரிசு வழங்கினார். வத்துகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வலல ஏ.ரத்நாயக்கா, மத்திய கல்லூரி மாணவியான தருஷி கருணாரத்ன மற்றும் அவரது பயிற்றுவிப்பாளரான வத்துகாமம் கல்விவலய உடற்கல்வி விளையாட்டு உதவி கல்விப் பணிப்பாளரான சுசந்த பெர்னாண்டோ ஆகியோர் இவ்வைபவத்தில் கௌரவிக்கப்பட்டனர். ஏ.ரத்நாயக்கா மத்திய கல்லூரி அதிபர் தம்மிக ஹேரத் உட்பட மற்றும் பலர் இதில் கலந்துகொண்டனர்.

உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டுச் செய்திகளை 'தமிழன்' பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்கமாக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு l h mon ஏ gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

தற்போது விற்பனையில்!

ஜூனியர் தமிழன் வழங்கும்

2023ஆம் ஆண்டுக்கான தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை

'வெற்றிக்கு வழிவகுக்கும்'

விசேட மாதிரி வினாத்தாள் பொதி




விலை ரூ.850/= மட்டுமே

பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது

பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0777983308 / 0741684643

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7